உ

கடவுள்துணை.

கௌரிமோட்ச நாடகம்.

இஃது,

மேல்பட்டாம்பாக்கம்.

சங்கரையர்மாணுக்கரில்ஒருவராகிய

கொஞ்சிகுப்பம் வன்னியகுல

துரைசாமிசமஷ்டியாராலியற்றியது.

தூக்கணாம்பாக்கம் வித்துவான்

பா. நடேசகிராமணியார் அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

இவை

மதுரா முத்தாண்டிகுப்பத்தி லிருக்கும்

எலிமெண்டெரிஸ்கூல் உபாத்தியாயர்

சொ. ஜெகநாத படையாச்சியாரிடம்.

சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

மயிலை.

தி. இரத்தினமுதலியார்.

அண்டுபிரதர் அவர்களால்

சென்னை.

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

ரிஜிஸ்டர்ட் காப்பிரைட்.

இதன்விலை [illegible]

உ

கடவுள் துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்சென்னப்பட்டணம் ஆதியப்பநாய்க்கன் தெருவு 67-வது நெம்பர் வீட்டிலிருக்கும் மயிலே. தியாகராஜமுதலியார் குமாரர் இரத்தினமுதலியார் அண்டுபிரதர் அவர்களால் இந்த கௌரிமோட்ச நாடகத்தை யாதாமொருவர் அச்சிடுவார்களாகின் **1867** - வது ஷத்து **25**-வது ஆக்டின் **20**-வது பிரிவில் **6**-வது விதியின்படி (ரிஜிஸ்டர் காப்பிரைட்) பெற்றிருக்கிறபடியால் இதை அச்சுக்கூடத்தலைவர்களும் மற்றெவர்களும் அடியில் கண்டிருக்கிற என்னுடைய அனுமதியன்றி அச்சிடப்படாது வேறு பாஷையிலும் மொழிபெயர்த்தும் அச்சிடப்படாது அப்படி சட்டத்திற்கு விரோதமாகச் செய்வார்களாகில் அதனல்நேரிடும் நஷ்டத்தையும் கொடுப்பதன்றி கிரிமினல் கோர்ட்டின் சட்டப்படிக்கி தண்டனைக் குள்ளாவார்கள்,

இப்படிக்கி,

மயிலே. தி. இரத்தினமுதலியார்

அண்டுபிரதர்.

நெ. 67. ஆதியப்பநாய்க்கன்தெருவு,

ஆனைகெவுனி சென்னை.

கடவுள் துணை.

சாற்றுக்கவிகள்.

கூடலூர்தாலுக்கா திருப்பாதிருப்புலியூர்.
ம-ா-ா-ஸ்ரீ, அதிகப்ப வீ. சோமசுந்தரசெட்டியார்
மாணுக்கரிலொருவருகிய தூக்கணும்பாக்கம் வித்துவான்
நடேசகிராமணியாரால் இயற்றிய

விருத்தம்.

மணிமலிவுவரிசூழ்ந்து மல்குமாதிரத்திலோங்கு
மணிபெருங்கௌரிமோட்ச மடைந்தநாடகத்தைசொற்ருன்
குணில்பெருமுரசார்வன்னிக் குலத்துதிராமசாமிப்
பணிதவப்புதல்வன்னூற்றேர் பகர்துரைசாமிமாதோ.

இ ஃ து,

கூடலூர்தாலுக்கா பள்ளிப்பட்டு
இஸ்கூல்உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ,
கு. வீரப்பமுதலியார் அவர்களாலியற்றிய

விருத்தம்.

தொடுகடலுடுத்தமாதின் றுளிர்முகத்திலகம்போன்ற
வடுவிலாகொஞ்சிகுப்ப வான்பதியுரையுஞ்சீரான்
கடுமிடற்றண்ணல்பாரி கௌரிமோட்சத்தைவிண்டான்
விடுசுடர்குலத்துதித்த வேடுறைசாமியோனே.

இ ஃ து,

புதுவை-அறியாங்குப்பம்கொம்மியன்-தானம்பாளையம்
நாடகஉபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ,
ர. கோவிந்தசாமிநாயகர் இயற்றிய

விருத்தம்.

புத்தமுதோதீம்பாகு புரிதேன்பாலு
புகழ்கதலிசீனி கலந்திட்டதற்கு
சுத்தமுள்ளபருப்புநெய்யு முப்புடைக்காய்
சுயரசமுங்கலந்துண்ட சுகத்தைப்போலே
கொத்திலகுசோலைவளர் கொஞ்சிகுப்பக்
குணகரேன்வன்னிகுல ருமரன்பாய்
பெற்றதுரைசாமியெனும் கவிவலாளன்
பேசினன்பெருங்கௌரி மோட்சந்தானே.

உ

கடவுள் துணை.

கௌரிமோட்சசரித்திர நாடகம்.

விநாயகர் துதி.

அருமறைவேதமோங்கும் அன்பானமதுரைதன்னில்
பெருமையாய்பரமமூர்த்தி பேர்பெரும்திருவிளையாட்டில்
வருமைசேர்கௌரிக்காக வந்துமேகாக்ஷிதந்த
கருதிநாடகமுரைக்க கணபதிகாப்புதாமே.

சுப்பிரமணியர் துதி.

பரமனுங்கைலைவாசன் பரிவுள்ளமதுரைதன்னில்
வரமதுகௌரிக்காக வந்துமேகாக்ஷிதந்த
திரமைசேர்சரித்திரந்தன்னை செப்புநாடகமாய்ப்பாட
குரவில்லாமுருகன்பாதங் கும்பிட்டுவணங்கினேனே.

சொக்கலிங்கேசர் துதி.

அங்கயற்கண்ணிபாகன் அமர்ந்திடுமதுரைதன்னில்
சங்கையின்றனை துதித்த தையலாள்தனக்குமோக்ஷம்
மங்களமாகத்தந்த மகிழ்ந்திருவிளையாட்டன்னை
இங்குநாடகமுரைக்க ஈசனேகிருபைசெய்வாய்.

அங்கயற்கண்ணியம்மன் துதி.

இலகியமதுரைதன்னில் இன்புறுங்கயிலைவாசன்
நலமுள்ளதிருவிளையாடல் நன்மைநாடகமுரைக்க
உலகினிலன்பருக்கு உகந்தமுதளிக்குந்தாயார்
நலம்பெருமுமையாள்பாத நான்போற்றிவணங்கினேனே

சரஸ்வதி துதி.

தாவியேகயிலைவாசன் தங்கியமதுரைதன்னில்
மேவியேகௌரிக்காக மேன்மையாம்மோக்ஷம்தந்த
லவியேசரித்திரந்தன்னை இன்பநாடகமுரைக்க
நாவினில்வருகவாணி நற்பதம்போற்றினேனே.

அவதாரிகை விருத்தம்

திருத்தன்சேவகனுவந்து கிசம்கேட்டசமணரேவும்
பெருத்தவாரணத்தைவென்ற பெரும்புகழுரைத்தேனிப்பால்
விருத்தராககாளையாய்ப்பின் விளங்கியகுழந்தையாக
உருத்தரித்தாடல்செய்த உண்மையையினிச்சொல்வேனே.

விக்கிரமபாண்டியன்விருத்தம்.

நெடியமுடிமன்னரெல்லாம் பணியும்தீரன
நித்தியமும்சிவபூஜை மரவாமாரன்
கொடியகுலகாலருக்கு கொடியகாலன்
குவலயத்துஉயிர்க்குயிருய் ஓங்கும்சீலன்
மெடியமனுசத்துருக்கன் தனக்குநாசன்
விக்கிரமபாண்டியனெனும் விசுவாசன்
படியதனில்புகழோங்கும் மந்திரிசூழ
பட்சமுடன்கொலுவாக வருகின்றாரே.

தரு,

பாதிமதியணிந்த சோதிபதம்வணங்கும்
பாண்டியராசன் வந்தேன்
மகாவிக்கிரமபாண்டியராசன் வந்தேன்

ஆதிமறையோராகி ஓதியுடனேகூட
நீதிமந்திரிமார்கள் நேரிலாலோசனைகூற
௧-நேத்தியாய்வாத்தியம் சாத்தியேமுழங்க
பார்த்திபர்கீர்த்தியை யேத்தியேவழங்க பாதி

மதுரைப்பதிதனக்குபொது நிலையானமாறன்
விதிமுறைவழுவாத நிதிபெருகிடும்சாதன்
சு-விண்ணவர்தொழுதிடும் கண்ணவர்தன்னை
பண்ணுவாருள்ளத்தில் எண்ணுவார்சொன்ன பாதி

மின்னல்கொடியுடைய கன்னியர்கவரிவீச
கன்னல்மதனையொத்த காவலர்புகழ்பேச
சு-கண்டவர்தெண்டமும் கொண்டிடும்நேசன்
அண்டையில்பண்டவர் நின்றிடும்வாசன் பாதி

சித்தமும்சிவபூசை பத்திமரவர்நாதன்
எத்திசையோர்களுக்கு மித்திருவாணநாசன்
சு-எம்பிரான்செம்பதம் நம்பிடும்சீலன்
அம்புவியோருக்கு இன்புள்ளலோலன் பாதி

பாண்டியன்-கவி

சொல்லாதசுத்தஞானம் சுடரொளிமயமாய்எங்கும்
பல்லார்கள்ஜீவன்தன்னை படைத்தளித்தழிக்கும்சங்கை
வல்லார்கள்குணமாய்எங்கும் வடிவதுவேறுகொண்ட
எல்லாம்செய்வல்லசத்தி இணையடிபோற்றிபோற்றி

வசனம்.

சகல ஜீவராசிகளையும் படைத்தல் காத்தல் அழித்தல் முக்குணங்களுக்கும் உடைதாரியாகிய சாக்ஷாதி பரமசிவத்திற்கு இடபாகத்தில் வீற்றிரானின்ற உமாபார்வதிக்கும் அடியேன் தீர்க்கவந்தனம்.

பாண்டியன் தரு.

சுந்தரமந்திரிஇந்தநகர் தன்னை எந்தனுலாண்டுவந்தேன்
குந்தகமுண்டோஇல்லையோ எனக்குகூறுவாய்என துமந்திரி

மந்திரி தரு.

அந்திவண்ணன் அவரருளாலே அணிந்தநகர்மதுரை
குந்தகமில்லைகுணமுள்ளஅரசே கூறினேன்நிசந்தானே

பாண்டியன் தரு.

போதவேமரவாமல்பூசுரஞானிகள் புரியுந்தவங்கள்நிஷ்டை
புகழாய்நடக்கின்றதாஎனதுமந்திரி புகலுவாய்அன்புடனே

மந்திரி தரு.

ஈசனருளால்பூசுரர்ஞானிகள் புரியுந்தவங்கள்நிஷ்டை
பேசவும்போமோபிசகில்லைஅரசே பிரியமாய்நடக்குதய்யா

பாண்டியன் தரு.

மட்டில்லாபுகழ்பெற்றமந்திரிமாரே மகிதலமன்னவர்கள்
கட்டளைதவராமல்கப்பணம்கட்டி கவனமாய்வருகின்றாரா

மந்திரி தரு.

அட்டிகளில்லைஅவனியில்மன்னவர் அவரவர்கப்பணங்கள்
பட்டணம்வந்துகட்டியேசெல்கின்றார் பாங்குள்ளானஅரசே

பாண்டியன் தரு.

மங்குலம்கனிந்துதிங்கள்மும்மாரி மாரசமல்பெய்கின்றதாமந்திரி
பொங்கமாய்தருமங்கள்மங்களமுடனே புகலுவாய்எனதுமந்திரி

மந்திரி தரு.

கங்குலகற்றிதிங்களும்சூடிய கர்த்தனரருளாலே
மங்குலம்கனிந்துதிங்கள்மும்மாரி மாராமல்பெய்குதையா

பாண்டியன்கவி.

மந்திரிமாரேகேளாய் மதுரைமாநகரமெங்கும்
குந்தகமொன்றில்லாமல் குணமுடன்நடப்பதாலே
எந்தன்தன்மனதில்தானே இன்பமேகொண்டேன்யானும்
இந்தணியீசர்பாதம் ஏற்றியேதுதிப்போம்வாராய்.

வ-ம். ஆனால்கேளும் மந்திரிமாரே நமததேசம் சுபேஸ்டம் பொருந்தியிருப்பதால் நமக்கு மகுத்தாகிய சந்தோஷந்தான் ஆகையால் நமது பட்டணத்திலிராநின்ற சொக்கலிங்கேசர் மீனாக்ஷியம்மன் இவர்களுடையபாதத்தை தெரிசித்துவருவோம் வாரும்என்னது மந்திரிமாரே.

பாண்டியன்-தரு.

அரகராமகாதேவா திருமூன்றுஉருவான சங்கரனே
அடியவற்கடியவா கொடியவிடமுண்டோன் சங்கரனே
வெள்ளியம்பலமாடும் வள்ளலும்மிடபாகம் சங்கரனே
வேண்டியுன்அருள்தாரும் தாண்டவமாடிய சங்கரனே
மறையதைநால்வற்கு குரையரவிடுத்தவா சங்கரனே
மண்ணுவிண்ணுமாக எண்ணுநிறைந்திட்ட சங்கரனே
இந்தணியீசனே எந்தன்செங்கோலுக்கு சங்கரனே
இரையவாஎன்றுமே குறைவாராமலேகாரும் சங்கரனே

பாண்டியன்சொல் கட்டளைக்கலித்துறை

வான்மாறினுமொழிமாறாத மாறன்மனங்களிக்கக்
கான்மாறியாடியகற்பகமேநின் கருணையென்மேற்
றான்மாறினும்விட்டுகான்மாறிடேன் பெற்றதாய்க்குமுலைப்
பான்மாறினுபிள்ளை பான்மாறுமோ வதிற்பல்விடுமே.

தேவாரம்.

சங்கராபோற்றிபோற்றி சதுர்மறைபொருளேபோற்றி
துங்கவெண்விடையாய்போற்றி தூய்மணிவிளக்கேபோற்றி
மங்களமாகசெங்கோல் மாராமல்வளரச்செய்யும்
எங்களுன்குலமாய்வந்த யீசனேபோற்றிபோற்றி.

பொதுவசனம்.

அகோதெப்படி யென்றால் இவ்விதமாக விக்கிரமபாண்டியராஜன் சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற்கண்ணியும் தெரிசனம் செய்து பின்கொலுமுகமமர்ந்து தேசவிசாரணை செய்தபின் அரண்மனைக்கு சென்றபிறகு கஞ்சமாபுரத்தில் வாசமாகிய மாதவசீலபிராமணாள் சபைக்கு வருவதுகாண்க.

விருத்தம்

மரையவர்குலத்தில்வந்த மாதவசீலனாரும்
குரைவில்லாவேதசாஸ்திரம் குணமுடன்கற்றுணர்ந்த
திரைகடலுளகளந்த திருமாதுமார்பன்பாதம்
நருமலர்மாலைசாற்றி நலமுடன்வருகின்றாரே.

மாதவசிலபிராமணாள்-தரு

மாமறைபொருளெல்லாம் நேமமுடனுணர்ந்த
மாதவசீலர்வாரார்கலையுணர்ந்த மாதவசீலர்வாரார்
பூமகள்துளவணிசாமளவர்ணனை போற்றிச்சதுர்வித
பூசுரர்கள்சூழவே மாமறை
பெருமாள்பாதத்தைதொட்டு திருநாமந்தனைஇட்டு
பெருமையுடனேவாரார் பூசுரர்சூழ
பெருமையுடனேவாரார் மாமறை
திருமாதுதிருபாதம் மறவாமலனுதினம்
தேவர்மொழிப்படியே சந்தோஷமாகவே
பட்டுகுல்லாவுமாட்டி அஷ்டாக்ஷரமீட்டி பலகலைகளும்ஓதியே
தடையில்லாமல் பலநாட்களும்ஓதியே மாமறை
தொட்டுபகைவரஞ்ச விட்டுமடிவர்மிஞ்ச
துலங்குமுப்புரிநூலும் இலங்கஅங்கைதரித்து
பலங்கொளவிருக்குதுலக மாமறை
சாஸ்திரங்களைகற்ற கீர்த்தியுடனேபெற்ற
சதுர்மறையோர்கள்சூழவேஇருபுரமும் சதுர்மறையோர்கள்சூழவே
கோத்திரதொழில்முறை சாஸ்திரமறிந்தமேலே
குற்றமில்லாததவம் பற்றுமனமுடைய மாமறை

மாதவசீலர்-கவி.

தாதவிழ்மலர்துளபமாலைபூண்டு தங்குகின்றதிருமாதுசேர்ந்த மார்பும், காதளவுதோயுங்கஞ்சநேத்திரமுங் கமலமலர்வதனமிகவடிவுதோனும், கோதகன்கள்சங்குசக்கரம் கதைகோதண்டம்கூர்வாளி தாங்கும், சதுர்கரங்கள்சூழமோதும் திருவடிமுளரிதான் அடிபணிந்துவணங்கினேனே.

மாதவசீலர்-கவி.

பன்னுமாமறையுணர்ந்த பத்தினிமாரேகேளாய்
கன்னலின்மொழியாளான கர்ப்பிணிஞயர்ந்தளந்தன்
நன்னயதேவிதன்னை நாமுமேஅழைத்தோமென்று
சொன்னசொற்படியேசென்று சுருக்கினிலழைத்துவாராய்.

வ-ம். ஆனல் வாருங்கோள் பத்தினிமார்களே கிரகமாகிய நமது மனைக்கிசென்று என்தேவியாகிய மாதவவல்லியை அழைத்து வாருங்கோள் பார்ப்பனிமார்களா.

மாதவவல்லி-கவி.

கோதருமமறையுணர்ந்த குணமுள்ளபிராணநாதா
காதலாய்யழைத்தசேதி கர்ப்பினிகாதில்கேட்டு
பீதமாய்பணிகளாரம் பிரியமாய்இடையுடுத்தி
மாதவவல்லியாளும் மகிழ்கூதியாய்வருகின்றளே.

தரு.

ஆதவன்தனக்குநேயன்	அம்புலிவதனம்தன்ன
மாதவவல்லியான	மங்கையும்வாரேன்
கம்மல்ஜிமிக்கிரத்தின	கல்புதைக்குமூக்குத்தியும்
செம்மையுடனிலங்க	சேயிழையும்வாரேன்
கச்சணிந்தகொங்கைரெண்டும்	கதித்துப்பரந்திலங்க
இச்சையுடன்கணவன்பக்கல்	ஏந்திழைவாரேன்
தடகரத்திற்கங்கணங்கள்	தகதகதகவென்றேயொலிக்க
மடமயிலன்னமென்ன	மங்கையும்வாரேன்
சேலைசரிகைமின்ன	சித்திடைஒட்டியாணம்தன்ன
மாலைக்குழலாள்	வஞ்சியும்வாரேன்
பாததண்டைகள்கொஞ்ச	பாடகங்களொலிமிஞ்ச
நாதனவர்தன்னைக்காண	நங்கையாள்வாரேன் ஆத

வேறு-தரு.

சரணம்செய்தேன்நாதனே	தருணமிதுவேதனே
கருணைசெய்யும்போதனே	கலைசஞுணர்ந்தநீதனே
ஆரியர்க்குஅன்பனே	அடிபணிந்தேன்இன்பனே
நாரியர்க்குயிந்தனே	நான்பணிந்தேன்தென்பனே
வேதியர்க்குவேந்தனே	வேண்டுவோர்க்குயீந்தனே
தாதியர்க்குகந்தனே	சருணம்மிகதந்தனே
பணிந்துநின்றேனபாதமே	பாவையானுன்னீதமே
துணிந்தருள்பிரசாதமே	தோகைக்கேற்றவேதமே சரண

மாதவவல்லி கொச்சகம்.

அருமறைகள் பலகலையும் அன்புடனே கற்றுணர்ந்த
திருவடிப்பொற் கமலந்தன்னில் தெருவையானும் பணிந்தேன்
பெருமைபெறும் அரண்மனையில் பெண்மணியாய் வீற்றிருந்தளன்னை
உருவமுடன் அழைத்தவிதம் உத்தமரே நீயுரைப்பாய்

வ-ம். ஆனல் கேளும் பிராமணா அடியாளை இச்சபையின் கண்ணில் அழைத்த சமாச்சாரம் தெரியச்சொல்லும் பிராமணா.

மாதவசீலர்-கவி.

அடிபணிந்த அருவையாளே வாழிவாழி
அழைத்தவிதம் அன்புடனே உரைப்பேன்கேளும்
படியளந்தமாயவனார் பதத்தைபோற்றி
பண்புடையபுத்திரனை பெற்றோநாமும்
நெடியவயதடைந்துவிட்டோம் இன்றோடின்று
நிலையில்லாகாயமது மகன்தனக்கு
கொடியுடையபெண் கொண்டுவந்துமாலைசூட்ட
கொம்பனையே அழைத்தவிதம்கூறுவேனே.

வ-ம். ஆனல் கேளடி பிராமணத்தி நமக்கானல் கிழத்தன்மையான படியினாலும் மேலும் இக்காயமானது அனித்தியமானபடியினாலும் இதுநிலையில்லை ஆகையால் நமதுகுமாரனுக்கு திருக்கலியாணம் செய்யவேணுமடி பெண்ணே பிராணவதி.

மாதவவல்லி தரு.

எந்தனாலேஎன்னபதில் பிராணநாதா
எனக்குசந்தோஷமாச்சு மோனவேதா
மைந்தன்தனக்குமாலை மகிழ்ந்துசூட்டினதாலே
இந்தமனைக்கிவேலை எனக்குஒழியும்மேலே எந்தன

மாதவசீலர் தரு.

காட்டுகிள்ளைமொழியாளே எந்தன்தேவி
கண்டுசொல்லவந்தாய் இந்தவார்த்தைதன்னை
நாட்டமில்லாதசொல்லை நன்றாயுரைத்தவஞ்சி
தோட்டம்நிலைக்கவில்லை தோப்புவைத்தாய்நீமெல்ல காட்டு

மாதவவல்லிதரு.

முதியவயதடைந்தே னினிமேலே
முடியாதெனக்குசெய்ய குடும்பவேலை

இதுவிதமறிந்துசொன்னேன் இதிலேகுற்றமென்ன
வதுவைமகனுக்கு வாழ்த்திமுடியும்மன்னா முதிய

மாதவசீலர் தரு.

எந்தன்தேவிசொன்ன வார்த்தைசரிசரி
எங்கப்பெண்ணிருக்கிறது குறிகுறி
உந்தன்மனதுபோல உகந்துமுடிப்பேன்மேலே
சந்தம்முடிந்துவேலே சந்தேகம்கொள்வாய்சால எந்த

மாதவவல்லி-கவி.

வேதமும்கலையுணர்ந்த வித்தகப்பிராணநாதா
மாதவன்தனையழைத்து மகனுக்குமணமுடிக்க
சேதியைசொல்லியானுஞ் சித்தமுங்களித்திருக்க
தோதுபெண்குறிக்கசொன்னீர் தோகையாளரியத்தானே.

வ-ம். ஆனல் கேளும் பிராமணா நமதுகுமாரனை அழைத்துகலியாணம் செய்துக்கொள்ளும்படி சம்மதிக்கச்செய்து அதன்பிறகு பெண்பார்க்க செய்யலாமென்று யோசித்திருக்க என்னை எவ்விடத்தில் பெண்பார்க்கச் சொன்னீர் சொல்லும்பிராமணா.

மாதவசீலர் தரு.

மங்கையரேமகனுக்குப் பெண்ணெங்குமில்லையா
இன்னும்நங்கை வல்லையா
மன்னவர்புகழ்உந்தன் அண்ணன்வீட்டில்தங்கம்போல
நல்லப்பெண்ணிருக்கு திபபோது
நீயும்மங்களமாய்மணம் முடிப்பாய்தோது
சு-மறைந்துமிகஉரைத்ததும் திருத்தமில்லைவெருத்தனடி மங்

மாதவவல்லிதரு.

எந்தன்பிராணநாதா என்னை
இருட்டாய்பேசுரீர் மிகதிருட்டாய்வீசுரீர்
எங்கும்மரிவாரோ உந்தனதங்கைமகள்தான்
அந்தபெண்ணைக்கொண்டுவந்தா லடுக்கும்தோதுதான்
சொந்தமாகும்குந்தமில்லை சுவாமிமாதுதான்
சு-சொன்னதுவும்நன்னிதியே பண்ணுமறைமுன்னேவர எங்

மாதவசீலர் தரு.

மாதேதங்கை மகளைக்கொள்ள
மறைவுமில்லையே ஒருதுறைவுமில்லையே

மங்கையரேநாளேசொல்வாய் எங்கும்பழிக்கவே
யேதுஅண்ணன்பெண்ணைக் கொள்ளஇல்லேஎன்றுமே
கோதுசண்டைஎன்னேரமும் கொடுப்பாய்பின்னேயே
சு-கொம்பனேயேநம்பிஇதை தெம்புசொன்னேன்சம்பரமுடன்

மாதவவல்லி தரு.

சரிசரிஎன்பிராணநாதாசாற்றவந்தது எனக்கேற்றநன்றது
தமையன்வீட்டுபெண்ணைக்கொள்ள நிமையில்முடியுமே
எரிபிரிஎன்றேநாளே தங்கைஇரைச்சலிட்டுமே
வெரியன்போலசண்டைஇடுவாய் வீணய்தொட்டுமே

சு-விதம்மெண்ணியேபதம் சொன்னேன்நான்
அதைஎண்ணியே சதங்கொள்ளுவீர் சரிசரி

மாதவசீலர்-கவி.

வஞ்சியரேஇப்படிக்கி வழக்கிட்டால்
மகன்வாமவின்பனுக்கு
மிஞ்சிமணம்தான்முடிக்க போரதில்லே
வித்தகியேஇன்னமொரு வார்த்தைக்கேளும்
மஞ்சனேயாம்தனேபோற்றும் சுதனேஇப்போ
வரவழைத்துமனதரிந்து வழியைக்கொண்டு
சஞ்சலங்களில்லாமல் மணமுடிக்க
சம்மதமோநின்விதியை சொல்லுவாயே

வம். ஆனல் கேளடி பிராணநாயகி நாம் ஒருவருக்கொருவர் வார்த்தையாடினுல் ஒன்றும்நடப்பதில்லே ஆகையால்நமதுகுமாரனே யழைத்து அவன் மனச்சம்மதப்படி நடக்கலாமடி பெண்ணே பிராணநாயகி.

மாதவவல்லிகவி.

தங்கள்மனம்சம்மதம்போல் பிராணநாதா
தையல்மனம்சம்மதமே தடையில்லேயே
எங்கள்வழிஉங்கள்வழி ஒன்றேவார்த்தை
எப்போதும்விட்டொழிய ஐயம்மில்லே
சங்குசக்கரமுடையானேப் போற்றும்
மகனேயழைத்து மனதரிந்துமணத்தைசெய்ய
பங்கமில்லாசுதனுமொரு பழுதுரையான்
சொல்வதுபோல் நடக்துவாயே.

வ-ம். ஆனால் கேளும் பிராமணா நாம் இப்படி வார்த்தையாடினால் ஒன்றும்முடியாது ஆகையால் நமது மகனையழைத்து அவன் சம்மதம்போல் நடக்கலாம் பிராமணா.

மாதவசீலர்-கவி.

அப்படிதானேசெய்வேன் அரிவைஎன்பிராணதேவி
செப்பியவிதத்தைபோல திருமணம்முடிப்பேனென்றும்
தப்பிதமில்லைசொன்னேன் சதுர்மறையோரேகேளாய்
இப்போதென்மகனைஇங்கு இட்டுநீவருகுவாயே.

வ-ம். ஆனால் வாருங்கோள் பிராமணரே நீங்கள் கிரகமாகிய மனைக்கிச்சென்று என்குமாரனாகிய வாமனவின்பனை சீக்கிரம்அழைத்துவாருங்கோள் அந்தணர்களே.

வாமனவின்பன் கவி:

தந்தைதாய்அழைத்தசேதி தனையனும்காதில்கேட்டு
விந்தைப்பொற்சரிகைவேஷ்டி விளங்கவேஇடையில்பூண்டு
அந்தமாய்நாமமிட்டு அங்கவஸ்திரமும்போட்டு
இந்துவின்வதனவாம வின்பனுவருகின்றேனே.

தரு.

வந்தான்வாமனவின்பதேவன் தந்தைதாய்முன்னாலே
வாரேன்வாமனவின்பசாதன் வந்தேன்
வாமனவின்பசந்திர னுதையம்போல
நந்தாமுகுந்தாவென்று நாமும்துதித்துமேலே வந்

மாதவன்மலர்த்திரு பாதம்மறவாபோற்றி
வேதமுடன்மெஞ்ஞான போதம்மனதிலேற்றி வந்

வட்டமதிமுகத்தில் பட்டநாமங்கள்சாத்தி
விட்டுமடிசஞ்சிகள் பட்டுதூசிமேலேபோற்றி வந்

செப்பும்மறைப்படிக்கு முப்புரிநூலுமிட்டு
ஒப்பில்லாமாயமந்திரம் தப்பில்லாமலேதொட்டு வந்

வேறு தரு.

வந்தனம்வந்தனம் வந்தனங்கள்தந்தனிதோ
பந்தமுடன்பெற்றெடுத்த தந்தைதாயேயுங்களுக்கு வந்

மல்லிகைமுல்லையும்நல்ல மலர்கொண்டுமே
மெல்லிபாதம்அர்ச்சித்து அல்லல்நீக்கிளென்றுமே வந்

பெருமையும்அருமையும் உருமையும்நீட்டியே
பொருமையொடுதிரமை அருமைதனைக்காட்டியே வங்

ஆரையும்பாசமாய்பேசு மெந்தன் தந்தையே
ஆசையுடன்பாசமதாய் தாசன்பணிந்தேன்முன்னையே வங்

வாமனவின் கொச்சகம்.

பன்னுமறை விதிப்படியே பரந்தாமனைத் தொழுது
என்னையன்பாய் பெற்றெடுத்த என் தந்தை தாயேயுங்கள்
பொன்னடிக்கி யான்சருணம் பொங்கமுடன் இங்கழைத்த
இன்னவிதம் என்றுநீங்கள் எடுத்துரையும் தந்தையரே.

வ-ம். ஆனால் சேனும் எனது தந்தையே என்னை இச்சபையின் கண்ணில் அழைத்த சமாச்சாரம் தெரியச்சொல்லும் தந்தையாரே.

மாதவசீலர் தரு.

மன்னும்புகழ்மாமணியேவாழியுனக்கு அப்பாவாழியுனக்கு
மணம்முடிக்கஅழைத்தேன் சொல்லும்பதில்எனக்கு

மாதவவல்லி தரு.

தந்தைதாய்உயிரிருக்க தனையனேஅப்பா
கட்டாமல்மணம்முடிப்பேன் அப்பாதடுக்காதே

வாமனவி தரு.

தந்தைதாய்மனம்போல சம்மதம்கொள்ள
அம்மாசம்மதம்கொள்ள
தையலெந்தஇடத்தில்பார்த்தீர் சாற்றுவீர்விள்ள

மாதவசீலர் தரு.

அத்தைமகள்தன்னைநாங்கள் ஆசையாகவே
அப்பாஆசையாகவே.
அவளுனக்குபார்த்துவந்தோம் நேசமாகவே

வாமன தரு.

ஒத்துக்கொள்ளமாட்டேனம்மா உண்மையாகவே
அம்மாஉண்மையாகவே
ஒருக்காலும்அவள்வேண்டேன் தண்மையாகவே

மாதவவல்லி தரு,

அம்மான்மகள்நல்லப்பெண்ணு அமைந்துஇருக்க
அப்பாஅமைந்துஇருக்க
அவளைக்கட்டிகொள்ளுமப்பா அன்புபெருக்க

வாமன தரு.

சும்மாவந்திட்டாலும்வேண்டேன சொன்னேனம்மணி
நான்சொன்னேனம்மணி
சொல்லிவந்தப்பெண்களெல்லாம் வின்னமம்மணி

மாதவசிலன்-கவி.

புத்தியில்மிகுந்தஎந்தன் புகழ்பெறவந்தபாலா
பத்தினிவேண்டாமென்ற பாவத்தைசொல்லுவாயே

வ-ம். ஆனால்கேளுமப்பா செல்வமே அத்தைமகளாகியஅன்ன லக்ஷுமியாகிய பெண்ணை உனக்கு வேண்டாமென்ற சமாசாரம் தெரியச்சொல்லுமப்பா கண்மணியே.

மாதவவல்லி-கவி.

பெற்றதாயுடன்பிறந்த பிரியதோரம்மான்பெற்ற
உத்தமிவேண்டாமென்ற உண்மையைசொல்லுவாயே

வ-ம். ஆனால் கேளுமப்பா செல்வமே உனது அம்மான்மகள் ஆதிலக்ஷிமி என்கிறபெண் வேண்டாமென்ற சமாச்சாரம் தெரியச் சொல்லுமப்பா கண்மணியே.

வாமனவின்பன்-கவி.

அன்னைதந்தையரே அம்மான்அத்தையாள்பெற்ற
பெண்தன்னையேகொள்ளமாட்டேன் சம்மதமில்லைஎன்றும்
சொன்னதின்விவரங்கேளுந் தோகையாள்அழகேஇல்லை
என்னமாய்ஒத்துக்கொள்வேன் எனக்கவள்வேண்டாம்தாயே

வ-ம். ஆனால்கேளும் தந்தையே நீங்கள்சொன்னப்பெண் அழகானவளல்ல நேக்குவேண்டாமம்மா தாயே.

மாதவசிலர் தரு,

மறையுணர்ந்தஅத்தை மகளுனக்குஅப்பா
மாராவடிவழகியை மணமும்செய்குவாய்

மாதவவல்லி தரு.

தரைபுகழும்அம்மான் மகள்தையலழகு
தவராதுனக்குமேலே தையலைக்கொள்ளும்

வாமனவின்பன் தரு.

அத்தைமகள்அழகேஇல்லை அம்மான்மகள்வாய்பட்டி
அவளெனக்குவேண்டாமம்மா அன்னையாரே

மாதவசீலர் தரு.

இப்படிநீசொன்னபெண்கள் எங்குபோய்பார்ப்போம்
என்னநாங்கள்செய்யப்போறோம் எந்தன்செல்வமே

மாதவவல்லி தரு.

ஒப்பிடாமலுரைத்த உனக்கேத்தபெண்களை
உலகத்தில்எங்குபார்ப்போம் எந்தன்மகனே

வாமன தரு.

எப்படிதான்தந்தையார் எடுத்துசொன்னாலும்
இப்போமணம்சம்மதிக்கேன் அடுத்துசொன்னாலும்

மாதவசீலர்-கவி

முதுமறையுணர்ந்தசீலா மொழிவதைதடுத்துநீயும்
ஏதுநீசெய்வதப்பா எடுத்துரைசெய்குவாயே

மாதவவல்லி-கவி.

கோதில்லாகுணத்தோரான குழந்தையினுரைதடுத்தாய்
சோதிநீநடக்கச்செய்ய சொல்வதைதெரிவிப்பாயே

வாமனவி-கவி.

என்னிடதந்தையாரே இயம்புவேன்நீங்கள்சொன்ன
கன்னியைஇப்போயானும் கடிமணம்செய்வதில்லை
அன்னியதேசமெல்லாம் யாசகன்போலேசுற்றி
தன்னிலைவிடுதிவந்தால் தான்பின்னால்சொல்லுவேனே.

வ-ம். ஆனால் கேளும் தந்தையே நீங்கள்சொன்னபெண்வேண்டாம் நான் ஸ்ரீகண்ணபிரானுடைய திருவடியை மனதில்தியானித்து ஒருவருஷம் யாத்திரையாகப் போய்வருகிறேன் தந்தையே.

மாதவசீலர்-கவி.

சுரிதிகளுணர்ந்தமைந்தா சொன்னதின்படியேகேளும்
உருதிகளுனக்குண்டானால் உற்றதோர்தேசம்செல்வாய்

வ-ம். அப்படிக்கி செல்லவேண்டுமென்றால் ஸ்ரீகண்ணபிரானுடைய திருவடியை மனதிலூன்றி போய்வாருமப்பா கண்மணி.

மாதவவல்லி-கவி.

பரிதிசூழுலகமெல்லாம் பாலனேசுற்றிப்பார்க்க
கருதியோநீயுங் கடினமாய்சென்றுவாராய்

வ-ம். ஆனால் கேளுமப்பா செல்வமே பரிதியாகிய சூரியன்வாசம்செய்யப்பட்ட இடங்களெல்லாம் போய் பார்க்கவேண்டுமென்றால் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை ஸ்தவுத்தியம் செய்துக்கொண்டு போய்வாருமப்பா கண்மணி.

பொதுவசனம்.

அகோதெப்படிஎன்றால் இவ்விதமாகத்தானே வாமனவின்பன் உபாதானம் யாசகவிர்த்தியாக செல்ல அப்போது மதுராபுரியில் வாசமாகிய சைவப்பிராமணன் விருப்பாக்ஷக ஐயர்சபைக்கு வருகிறவிதங் காண்க.



விருப்பாக்ஷர்-கவி.

விரவழுதிநாடாளாளு விக்கிறமாதீரன்
விண்வியதிருக்கோவில் தன்னில்சென்று
மருவுகமழ்கொன்றைதும்பை யணிந்தயீசன்
மலர்பாதம்வணங்கிசெங்கோல் துதித்துநின்ற
துரவுவளர்சைவமறை குலத்துதித்த
சுத்தமுள்ளவிருப்பாக்ஷக புனிதனாரும்
உருவமதிவெண்ணீரும் நிரையப்பூசி
உள்ளத்தில்சிவன்பாதம் தொழுகுவாரே

தரு.

ஆதிமறைகுலத்தில்நீதியுடனேவந்த ஐயர்விருப்பாக்ஷகர்வாரார்
வேதங்களோதும் ஐயர்விருப்பாக்ஷகர்வாரார்
பாதிமதியணிந்தபரமசிவனாரிரு கோதிபாதிமலகுணமாய்மனதிலுரு
கொண்டிடுநாதன் அருள்முண்டிடும்போதன்

ச-குற்றமகற்றிய உத்தமசிலன்
சத்தியமனதினில் பெற்றிடும்பாலன் ஆதி

மெய்யைநன்றுயரிந்து விதிநடத்தியசாது
சைவநெறியைவிட சமையம்நிரைவேராது
தண்மையுமரிந்தோர் அதின் உண்மையைதெரிந்தோர்
சு-சதுர்மரைக்குலத்தில் துதிபெரும்மாதா
பொதுவிலேதவரிடா நிதிபெரும்சாதா ஆதி

உய்யும்வழிதனக்கு உத்ததுணையதான
மெய்யில்வெண்ணீரணிந்து மேன்மைபெருகும்மோன
வேதமும்கண்டோர்ஞானப் போதகம்முண்டோர்
சு-விண்ணவர்தொழுதிடும் கண்ணவர்தன்னை
எண்ணுவாருலகத்தில் நண்ணுவார்சொன்ன ஆதி

நித்தியம்சிவபூசை நேசம்விடாதமெய்யர்
பத்தியாய்உருத்திராக்ஷப் பணியணிந்திடுங்கையர்
பரமனைத்துதிப்போர் பஞ்சாக்ஷரமதைவிதிப்போர்
சு-பங்கயவதனியாள் அங்கையர்கண்ணி
பொங்கமாய்மனதில் தங்கிடஎண்ணி

விருப்பாக்ஷகர்-கவி.

விதிமுரைதனையுணர்ந்த வேதியத்தோழமாரே
மதியணியீசர்பாதம் மறவாமல்துதிகள்செய்து
கதிரொளிவடிவமுள்ள கன்னியாள்மகளைஇப்போ
நிதிபெரும்செல்விதன்னை நீயுமேஅழைத்துவாராய்.

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாகத்தானே விருப்பாக்ஷக ஐயர் கொலுமுகம் அமர்ந்து தன்குமாரத்தியாகிய கௌரியம்மனை அழைக்க அம்மன் சபைக்குவருகிற விதங்காண்க.

கௌரி-கவி.

மரையவர்குலத்தில்வந்து மாவிருப்பாக்ஷகனுர்க்கு
குரையறுமகளாய்வந்த கோதையாள்கௌரிதானும்
விரைமலர்க்குழலாளான மெல்லியருகில்சூழ
இரைசிவன்தன்னைப்போற்றி இன்பதந்தையர்முன்வாராள்

தரு.

மங்களகுணத்தின்வாசி திங்கள்நேர்முகப்பிரகாசி
மாதுகௌரியும்வாரேன் தந்தைதாய்முன்னே
மாதுகௌரியும்வாரேன்

பங்கயவதனரூபி அங்கயற்கண்ணியாள்பாதம்
மங்கைமனதிலேற்றி பொங்கமாய்துதிப்பாள்வேதம்

சு-சாதுகள்மிஞ்சிய தன்குழல்மாது
பாதகம்நீங்கிய பைங்கிளியோது மங்க

கொன்றைதும்பையணிந்த மன்றுளாடுமீசனை
என்றும்மனதிலிவள் கொண்டாடுவாள்நேசனை

சு-இங்கிதர்குணபதி மங்களமாக
ஈசனைப்போற்றியே நேசமாய்வாராள் மங்க

வஞ்சிபார்மொழியாள் கொஞ்சும்கிளியாளென்ன
மஞ்சுமவள்கூந்தலுக்கு அஞ்சிப்பயந்தோடுமே

சு-மங்கையாள்வாரணி மாதனம்மிரண்டும்
தங்கக்குடமென்னவே சாற்றலாங்கண்டும் மங்

செந்தேன்கொடிமுல்லைக் கொடியுமிடையெனவே
விந்தையுடையமாதர் விளம்பிடவுமெல்லவே

சு-கோலமயிலன்னம் கூசுமேநடைக்கி
ஞாலமேபுகழ்ந்திடும் நங்கையாள்துடைக்கி மங்

கௌரிதரு.

ஆதிமரைக்குலபதியே அந்தணர்க்கொருநிதியே
ஐயாமெய்யாயான்சருணம் ஆண்டுமெந்தன் அருள்நிதியே
இன்பமுடன்யீன்றெடுத்த என்னைவளர்த்தந்தையரே
எல்லாம்வல்லநற்பதமே எந்திழையாள்பணிந்திட்டேனே
ஆலத்தையுண்டருள்குடியே அவர்பூசைமறவாபடியே
ஆற்றிபோற்றியேற்றிதுதி ஆசையாயுரைத்தேனடிசரணம் ஆதி

கௌரி கொச்சகம்.

வேதமதைசாதனங்கள் விதிவழியேமறவாத
மாதவம்பெருகுதந்தை மலரடிக்கேயான்சரணம்.

வ-ம். மரையென்னும் வேதங்களை களங்கமறகற்றுணர்ந்தஎன் தந்தையரே தங்கள் திருவடிக்கி அனேகவந்தனம் தந்தையே.

விருப்பாக்ஷகர் கொச்சகம்.

காதலுடன்யீன்றெடுக் கண்மணியாய்வந்துதித்த
போதவளர்யென்மகளே புண்ணியமாய்நீவாழி

வ-ம். மகாராசியாய் தீர்க்காயுசுபெற்று என்றென்றைக்கும் சுபேஷ்டம்பொருந்தி வாழக்கடவாய் எழுந்திருமம்மாள் குமாரச்செல்வியே.

கௌரிவிருத்தம்.

திருமருவும்கூடல்பதி தன்னில்சென்று
தேவர்களுமூவர்களும் யாவர்காண
மருகருகுங்கொன்றைமலர் மதியும்கெங்கை
மான்மழுவும்குலுங்கதனி நடனம்செய்யும்
அரவமணிபணிகையானை போற்றிசெய்து
அரண்மனையில்விளையாடி இருந்தஎன்னை
துரவுவளர்மறையவர்சூழ் சபையிற்றானே
சுகமுடனே அழைத்தவிதம் சொல்லுவாயே.

வ-ம். ஆனால் கேளும் தந்தையே அரவத்தை ஆபரணமாகத் தரித்தருளிய சாட்சாதி சிவபெருமானுடைய திருவடியை மனதிலூற்றி கிரகத்தின்கண் வசித்திருந்த என்னை இச்சபையின்முன் அடியாளை அழைத்தவிஷயங்கள் தெரியச்சொல்லும் என்தந்தையே.

விருப்பாக்ஷகர் விருத்தம்.

அருமைபெரும்சைவமறை குலத்தில்வந்த
ஆயிழையேஅருண்மணியே அரியவாழ்வே
உருவமுடனுனையழைத்த விதமுரைப்பேன்
உருக்கமுடன் அருசிருக்கு மகளேகேளாய்
தருமநெறிமுறைபிறளா உலகந்தன்னில்
சகலருமேஇன்பமதில் சுகித்திருக்க
பெருமையுளஉனக்கின்பம் இன்னதென்று
பேசினுல்யான்பதிலும் புகலுவேனே.

வ-ம். ஆனால் கேளுமம்மா குமாரசெல்வி உலகத்தின் அனேகவித சுகதுக்கமிருக்கின்றது அதில்உனக்கு விருப்பமானதைக் கேட்டால் போதிக்கிறேனம்மா குமாரசெல்வி.

கௌரி தரு.

ஐயாஇதென்னஞாயமா அரியாதகுணமுள்ளசிறியாளுனக்குமே
துய்யாஉரைப்பதுஞாயமோ
மெய்யாமறையுணர்ந்த துய்யாபெரியமொழி
எய்யாதவளென்னசெய்வேன் செய்யாதுரையும்வழி

சு-இத்தரைமனதினில் எத்தனோநானுரைப்பது
பெற்றவென்தந்தையே குற்றமோதடுப்பது ஐயா

விருப்பாக்ஷகர் தரு.

கந்தங்குழலாள் அன்னமே காதலுடன்மின்றெடுத்தமாதரசே
என்மகளே இந்துவதனசொர்னமே
இந்தஉலகம்தன்னில் வந்ததுஎந்தனுதம்
எந்தப்போகமானாலும் சொந்தமாகச்சுகித்து

சு-இஷ்டம்போல்நடப்பது கஷ்டமுமில்லை
பச்சைப்பசுங்கிளி அச்சமேன்தொல்லை கந்த

கௌரி தரு.

நல்லபோகமுமுண்டுதான்இந்தநானிலம்தன்னிலேமானவர்சுகித்திட
தொல்லைநடத்தப்பண்டுதான்
எல்லைவளர்போகத்தில் மெல்லியெதைக்குரித்து
சொல்லியேஉரைப்பது அல்லல்தீதரிப்பது

சு-தோகைக்குபுகன்றால் ஆகமம்இன்னதென்று
வாகனேஉரைத்திடும் ஞாபகமாக நல்ல

விருப்பாக்ஷகர் தரு

கண்ணேமணியேகேளுமே கனத்துடன்போகங்கள்அனைத்துமே
இருந்தாலும் திண்ணமுரைத்துமீளுமே
வண்ணக்கிளிமொழியே அண்ணல்சிவனைப்போற்றி
என்னுங்காமியத்தில்மனம் நண்ணுமிகவேதேற்றி

சு-இஷ்டம்போல்நடப்பது கஷ்டமுமில்லை
அஷ்டசுகமுவரு அரிவையேனில்லை கண்ணே

கௌரி கவி.

என்னிடதந்தையாரே இஷ்டகாமியங்கள்தன்னை
தன்னினுனெடுத்துரைக்க கருத்ததுதோணவில்லை
இன்னின்னவிதங்களென்று எடுத்துஎன்வாயால்சொல்லி
உன்னியேகருத்தமர்ந்தால் உரைப்பனுன்பதில்தானையா.

வ-ம். ஆனால்கேளும் தந்தையாரே அடியாள் இளமைப்பருவமானபடியாள் உலகத்திலுள்ள இஷ்டகாமியங்களில் இன்னது சுகமென்றும் இன்னது கஷ்டமென்று நேக்குதெரியாது ஆகையால் தாங்கள் போதிக்கவேணும் தந்தையே.

விருப்பாக்ஷகர் தரு.

மனதின்படியுரைப்பேன்கிளியே மடமயில்மகளேனுமகவதியே
சடமும்நீடித்திருக்க சகலபாக்கியமுண்டு
புடவையில்மகிழ்வார்கள் புண்ணியமிகஉண்டு மன

கௌரி தரு.

பன்னும்மறையுணர்ந்ததந்தை நீபகரும்மொழிகளென்னநிந்தை
சொன்னச்சடம்முருவ தோணும்வெவ்வேருக
என்னமாய்நம்புவது எடுத்துரையும்மேலாக

விருப்பாக்ஷகர் தரு.

மதிதலமகளேனும்மயிலே மாந்துளிர்சோலைவாழ்குயிலே
பதிதனில்செல்வமும் படைத்தோர்பெரியோரென்று
விதியிதுஇருக்குதா மேனைசொல்வாராநன்று

கௌரி தரு.

பலகலையுணர்ந்தமறைவேதா பகரும்மொழிகளென்னதோதா
மலைபோலசெல்வம்தன்னை மண்ணில்படைத்தாருண்டு
அலைபோலஅழிவுண்டு அறிவுகொட்டாரேஇன்று

விருப்பாக்ஷகர் தரு.

அருளுருவேநானென்று அம்மா அம்மொழிகேளுநீசும்மா
பொருளைப்படைத்திருந்தால் புகழும்கீர்த்திகளுண்டு
இருளும்இடிய்கலும் எண்ணியதேசத்தில்சென்றால்

கௌரி தரு.

இந்தப்பொருள்களென்னமலையா எண்ணமெல்லாம்ஒருநிலையா
சொந்தமாய்தங்குதற்கு சுவாதீனம்அவர்க்குண்டா
இந்தஇடம்தானுண்டா கூறும்எனக்குநன்றாய்

விருப்பாக்ஷகர் தரு

சொல்லும்விதங்களெல்லாம்தடுத்தாய் தோராமல்பதில்மொழிவிடுத்
தொல்லைஜடங்கள்தோறும் சூழும்ஆன்மாவைபோற்றி[தாய்
எல்லவருமிருக்க இஷ்டமோசொல்லுவால்

கௌரி தரு.

தந்தையேஆத்துமாசெய்யும்வேலை தவருவதுண்டதினாலே
எந்தஇடத்தில்தங்கி இருக்குதுசொந்தமாக
அந்தவிதத்தைநன்றாய் அறிவிப்பாய்பந்தமாகதந்தை

விருப்பாக்ஷகர்கவி.

செம்மதிசடையில்சூடும் சிவனருளாலேவந்த
அம்மணிவதனிஎந்தன் அருமைக்கண்மணியேவாழி
இம்மையில்போகமெல்லாம் இருந்துமேவிட்டதாலே
சம்மதம்எதுதான்சொல்லும் சந்தேகம்தணியத்தானே.

வ-ம். மதியாகிய சந்திரனை சடாபாரத்தில் தரித்தருளிய சாட்சாதி சிவபெருமானுடைய கிருபையினால் அவதரித்த எனது குமார செல்வி இம்மையில் அனேகவித சுகதுக்கமிருக்கிறது அதிலுனக்கு எதுசம்மதம் தெரிவிப்பாய் கண்ணே.

கௌரிகவி.

நல்லதுதந்தையாரே நானிலபோகமெல்லாம்
மெல்லியாளெடுத்துரைக்க மிகவும்சந்தேகமுண்டு
எல்லையில்மாந்தரெல்லாம் எடுத்திடுமபிரவிநீங்க
சொல்லுவாய்மருந்திருந்தால் தோகையாளறியத்தானே.

விருப்பாக்ஷகர்தரு.

துங்கமுள்ளத்தங்கமேநீ அங்கங்குளிர்மணியே
துலங்கும்திருநலங்கனிந்த அலங்கிர்தஇனியே
எங்குநிரைசங்கரர்பால் தங்கமானத்தனியே
இந்தமதிவந்ததென்ன செந்திருமாமணியே

கௌரிதரு.

பண்டுமறைகண்டுணர்ந்த விண்டிடும்எனையா
பலவிதமும்உலகில்தெய்வம் நிலையில்லையேமெய்யா
உண்டுயிரைகொண்டுபோகும் சண்டன்வரமெய்யா
உரைத்தபோகம்கருத்தவனை மறைத்திடுமோதுய்யா

விருப்பாக்ஷகர்தரு.

எந்தமறைகுலத்துதித்து பார்த்துவிடாது
இந்தப்புவிவந்ததினால் வந்துபிரந்தப்போது
கூத்தவனும்காத்திருந்து எத்துயரைமாத்தி
கொண்டுபோவான்கண்டிருந்து நின்றுதடுப்பாரேது

கௌரிதரு,

ஐயாஇந்தவையகத்தி லுய்யும்வகையேது
அந்தகனால்இந்தஉயிர் நொந்துப்படும்போது

எய்யுமரைசெய்யுந்தொழில் மெய்யுணர்ந்ததய்யா
இரவாமலும்பிரவாமலும் கருவாவழியோது

விருப்பாக்ஷகர் கந்தார்த்தம்.

அமுர்தமெனும்மொழிபுகலும் மகளேஇந்த
ஊழிபவம்ஒழித்திடவே அன்புகொள்ள
உத்தமியேஇதற்குப்பதி லுரைப்பேன்கேளும்
நாழிதனை துலைத்தோன் மலரோனும்பர்
நலம்பெறவேபிரவிவழி ஒழிப்பதர்க்கு
வீழியம்மன்மந்திரத்தை விடவேரில்லை,

வ-ம். ஆனால் கேளுமம்மா குமாரசெல்வி இந்த பஞ்சாக்ஷரமந்திரத்தை இடைவிடாமல் செபித்தால் இதுவே பிரவிநோயை நீக்க மருந்தாகுமம்மணி.

தரு.

வேதம்பஞ்சாக்ஷரத்தின்போதம் பொசிக்கும்பிரசாதம்
உலகில்மகாநீதம் பருதம்தனிலோது
ஓதுமந்திரப் உரைத்திட்டேன்பாரு வேதம்

கௌரிகந்தார்த்தம்.

பாதிமதிசடையணிந்த பரமனுரும்
பகரரியமறைபொருளை நால்வருக்கு
ஓதியுணர்வித்தக மாகநீரும்

உளங்கனிந்துஉண்மையுடன் யெந்தனுக்கு
மாதிருவர்மார்புரையும் மாலும்பிரமன்
மாதவனும்துதிகொள்ளும் மந்திரம்தன்னை
காதலுரைத்திடபிரவி நீங்குமென்று

வ-ம். தாங்கள் போதித்த மந்திரத்தை இடைவிடாமல் சௌவுத்தியம்செய்ய சித்தமாகினேன் தந்தையாரே.

தரு,

கண்டேன்அடியாளன்புகொண்டேன் பஞ்சாக்ஷரத்தைஎண்டேன்
பாவவினையைவிண்டேன் சொன்னேன்மந்திரம்
நன்றேநன்றேநம்பினேனையா சண்டனுமணுகிடாஉணடிதுமெய்யா

விருப்பாக்ஷகர் கவி.

சுந்திரமகளேஇந்த தொல்லையாம்பிரவிநீங்க
மந்திரமிதுவேயாகும் மாளிகைதன்னில்சென்று
கந்தரம்கருத்தபீசன் கழணிணைபோற்றிசெய்து
அந்தரம்தன்னில்வாழும் அருந்ததிபோலவாழ்வாய்.

வ-ம், ஆனல் கேளும் குமாரசெல்வி இந்தமந்திரமாவது பிரவி நோயைநீக்கி சிவசாயுச்சிய பதவியைக் கொடுக்கும் இதையல்லாமல் வேரு எந்தவகையிலும் பதவிகிட்டாது இதையே குருமொழியாக கொண்டு நடந்துகொள்ளுமம்மா குமாரசெல்வியே.

கௌரிகவி.

மரையவர்க்கரசாய்வந்த மானிதிதந்தையாரே
தரைதனில்பிரவிநீங்க தையலாளருகமைந்தேன்
உரைசெய்தமந்திரம்தன்னை உள்ளத்தில்கொண்டுவந்தேன்
நிரைமலரடிபணிந்தேன் நின்மனைக்கேகிவாரேன்.

வ-ம். ஆனல்கேளும் தந்தையே மரையென்னப்பட்ட வேதங்களை ஓதப்பட்ட பிராமணர்களுக் கெல்லாம் முதன்மையாகிய தந்தையே நீர்போதித்த மந்திரத்தை உச்சரித்துகொண்டு வருகிறேன் நான்கிரகத்திற்கு போய்வருகிறேன் தந்தையாரே.

விருப்பாக்ஷகர்கவி.

தேசுள்ளமகளேயம்மா சிவனடிமறவாநித்தியம்
பூசைகள்செய்தீரானல் பொய்பாவம்ஒழியும்தானே
ஆசையாயருகிருக்கும் அந்தணதோழன்மாரே
வாசமாய்மனைக்கிசென்று மனைவியையழைத்துவாராய்

ஸ-ம். செகதீசனுடைய திருவடியை மரவாமல்மடி பூசைசெய்தாயாகில் முன்சென்மத்தில் செய்த பாவங்களெல்லாஞ் சூரியனைக் கண்ட பனிபோல்நீங்கி நல்வாழ்வளிக்கும் நமதுகிரகத்தில் சென்றுவாரும் ஆனல் வாருங்கோள் அந்தணர்களே நமதுகிரகமாகிய மனைக்கிசென்று எனதுதேவியாகிய சுபாவிரதையம்மனை சீக்கிரம் அழைத்துவாருங்கோள் அந்தணர்களே.

சுபாவிரதை கவி.

நதியணிசிவனூர்பாதம் நானுமேதுதித்துபோற்றி
துதிசெய்யும்நாதர்சேதி சுத்தமாய்செவியில்கேட்டு
மதிமுகவதனமுள்ள மங்கையாள்பணிகள்பூண்டு
விதிமுறைவழுவா சுபாவிரதையும்வருகின்றாளே.

பொது வசனம்.

அகோதெப்படி யென்றால் விருப்பாட்சக ஐயரானவர் தனது தேவியாகிய சுபாவிரதை யம்மனை யழைக்க அம்மன் சபைக்கிவருவது,

தரு,

சுந்திரரூபமானசாதுஒயிலாய்வாரேன் சுபவிரதையாளெனுமாது
சுந்திரரூபமாது இந்திராணிஎன்றோது
சந்திரவதனிமாது மந்திரமறையோது சுந்திர

தேசம்பிரகாசமானகண்ணாள் சிவனூரிடபூசைஎன்றுமறவாதபெண்
வாசமலரும்வண்டு வளரும்குழலுடையாள் [ணாள்
பாசபல்லக்கிலேரி பரமன்சிந்தையுடையாள் சுந்திர

கொங்கைமீதினில்கச்சை யிலங்கமலர்முகமும்
தங்கப்பணிகள் மார்பில்குலுங்க
செங்கையில்கங்கணமும் சேலைசரிகைமின்ன
துங்கந்தாளிதண்டையுந் துலங்கும்பணிகள்மின் சுந்திர

ஷை தரு.

சரணமையனேதிவ்யபாதம் சரணமையனே
சரணமையனே கருணையாளனே
மறையுணர்ந்தநல்லவரே இந்ததரைபுகலும்வல்லவரே
விரைகழல்துன்னிலடியாள் முறைமுறையாய்பணிந்தேன்
ஆசையுள்ளநாதா சிவன்பூசையுள்ளவேதா
வாசமலரடிக்கே பாசமுடன்பணிந்தேன்
விப்பிரதிபதியேஎந்தன் கற்பகருணநிதியே
பொற்பாதம்தன்னிலே மெய்புடன்யான்பணிந்தேன் சர

சுபாவிரதை கவி.

வேதமுங்கலையுணர்ந்த வித்தகப்பிராணநாதா
பாதமேபணிந்தேன்யானும் பக்ஷமாஅடியாள்தன்னை
ஏதுகாரணத்தினாலே இவ்விடம்அழைத்தீர்நாதா
சீதுகளுடனேயும் சாற்றுவாயரியத்தானே.

வ-ம். வேதாகமங்களை களங்கமற கற்றுணர்ந்த எனது பிராணேசா அடியாளை இச்சபையின்கண் அழைத்த சமாசாரம் தெரியச்சொல்லும் பிராணநாதா.

விருப்பாக்ஷகர்-கவி.

மெல்லடிபணிந்துநின்ற சுபாவிரதையேவாழிவாழி
சொல்லுவேன்அழைத்தசேதி தோகையேநன்றுகேளும்
வல்லவன்தவத்தால்வந்த வஞ்சியாள்மகளுக்கேத்த
எல்லையில்புருஷனுண்டோ இல்லையோஎன்னசெய்வேன்.

வ-ம். ஆனால் கேளடி பிராணநாயகி நமது அருந்தபோபலத்தினுற்பத்தியாகிய எனது குமாரச்செல்விக்கு எவ்வர்னமான மாப்பிள்ளை எங்கே இருக்கிறானோவென்று என்மனதில் கிலேசமாயிருக்கிறேன் பெண்ணே பிராணநாயகி

சுபாவிரதை தரு.

மாதவம்பெருகும்ஐயரே நித்தியமான
மாமறையோதும் துய்யரே
ஓதுவசனமநன்றோ ஊமைபோல்சொல்வாருண்டோ
பேதையைப்போலவே பேசவந்ீரோமேலே மாத

விருப்பாக்ஷகர் தரு.

ஆசைக்கிசைந்தகண்மணி யானும்சொல்லுவேன்
அன்பாககேளும் பெண்மணி
தேசுவடிவம்சொந்த செல்வமகளுக்கெந்த
பூசுரர்கொள்ளுவார் பொருத்தணிவிள்ளுவார் ஆசை

சுபாவிரதை தரு.

அவசரம்யென்னகில்லுமே மகளைக்கொள்ள
ஆருமில்லையா சொல்லுமே
சிவன்செயல்படிமுடிக்க சேர்ந்தபந்துஇருக்க
எவருக்கிந்தமதி ஈடுத்துசொல்வாரோவிதி மாத

விருப்பாக்ஷகர் தரு.

பந்துகளனேகமிருக்க கருணைநிரை
பரமன்செயலு மிருக்க
அந்தங்குணமும்பெற்ற அருமைமகளுக்கேத்த
சொந்தப்புருஷன்தன்னை சொல்லுவாய்எந்தன்முன்னே ஆ ஈச

சுபாவிரதை-கவி.

மாமறைதனைபுணர்ந்த மதியுள்ளபிராணநாதா
பூமியில்பெண்பிரந்தால் புருஷனையதர்க்குமுந்தி
காமனையெரித்தயீசன் கணக்காகப்படைத்திருப்பார்
தாமதபபடுவதென்ன சாற்றுவாயரியத்தானே.

வ-ம், ஆனால் கேளும்பிராமணா பெண்கள் பூமியில்ஜனிக்குமுன்னமே அதற்கு ஓர்நாயகன் சாட்சாதி எம்பெருமான் படைத்திருப்பான் நீயாதொன்றுக்கும் வியாகூலப்படவேண்டாம் பிராமணா.

விருப்பாக்ஷகர் தரு.

பாசமானஎந்தன் ஆசைக்குகந்ததேவி
பகரும்வார்த்தைகளிது நன்றோநானும்
அகமலர்ந்தேனிதோ கண்டு
பேசும்பெண்களைபிந்தி நேசக்கணவன்முந்தி
பெம்மான்படைப்பானென்று தெரியுமே
இனிநம்மால்நடப்பதென்றரியுமே

சுபாவிரதை தரு.

அரியுமறைசிரந்து தெரியுமென்றேவரைந்த
ஐயரேஇதுஎன்னவிசனம் நல்லதுய்யரேஇதுஎன்னவசனம்
தெரிவைமகளாலே உரிகினீர்நீமேலே
தேவியரியகில்லும் உமதாவிக்குரையைசொல்லும்

விருப்பாக்ஷகர் தரு.

சொல்லுவேன்மகள்போல நல்லவர்புவிமேலே
தோணக்கிடைப்பதுமரிதுநாமும் காணக்கிடைப்பதும்பெரிது
தொல்லைப்பிறவிமீள அல்லல்மந்திரந்தேர
தூயமனமுமுள்ளமாது அதைதெரிந்துபதிலெனக்குஓது

சுபாவிரதை தரு.

ஓதுமந்திரங்கொண்டு பேதம்மரவாநின்று
ஒழியாப்பிரவிதன்னைநீக்கி என்றும்

மழியாப்பாதகம் தன்னைதாக்கி
மாதுவளர்வதாலே காதலன்இனிமேலே
வருவார்மகளுக்குதோதாசிவன் தருவார்மகளுக்குநாதா

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாகத்தானே விருப்பாக்ஷக ஐயரும சுபாவிரதையம்மனும் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்திருக்கஅந்தச்சமையத்தில் வாமனவின்பன்மதுராபுரியைநாடி யாசகவிர்த்தியாக பாத்திரமேந்தி பிச்சைக்கு வருகிறவிதங்காண்க.

வாமனவின்பன் தரு.

தாமோதரானந்தாவென்றுமாயன் தாளிணைதன்னையேதானினைந்து
வாமனமுனிவன்தானும் இந்தவையகமசுற்றியேவாரேனையோ
நாராயணுமென்றுநல்ல நற்றவமமந்திரம்தன்னையோது
பாராயணம்பிச்சைசெய்து பாத்திரமேந்தியேவாரேனையோ
தேசதேசமெங்குமசுற்றி தென்மதுரைமாநகரம்வநதேன்
ஆசையுடனேஇஙகுஅழைத்து அமுதுகள்தருவாருண்டோ
நநதாஅரிமுகுந்தா நாகத்தின்மீதுகண்வளர்ந்த
எந்தையேடந்தனைபோற்றி ஏற்றியேபிச்சைக்காகவாரேன்
கையில்துய்யவணையேந்திநல்ல கர்த்தன்பாதத்தைதோத்தரித்து
மெய்யில்திருநாமமிட்டு விளையாடிகம்காண்டுவாரேனையோ தா

வாமனவின்பன்-கவி.

தாமரைமலரில்வாழும் தையலைமார்பணிந்த
சாமளவர்னமாயன் தாளிணைபணிந்துபோற்றி
நேமமுமுடித்துகையில் நெடியபாத்திரமுமேந்தி
வாமனவின்பன்பிச்சை வாங்கவேவருகின்றேனே.

வ-ம். தாமரைமலரில் வாசமாகிய லட்சுமியை மார்பில்தரித்தருளியகண்ணப்பிரானை துதிசெய்து பிச்சைக்கேட்பது.

வாமனவின்பன் தரு.

நந்தாநந்தாஅரிகோவிந்தமே சிந்தைநாடியபேருக்குவைகுந்தமே
என்றெந்தராமபிரபந்தமே ஏற்றிதுதிக்கவழிசொந்தமே
கரியமேனியர்க்குநல்லவர் மாதவநாராயணன்துதிசொல்லுவர்
ஆனைக்குஅருள்தந்தஆண்டவர் அவரைஅநுதினம்மறவாமல் வேணடவே
வானவர்க்கோன்பணிபூண்டவர் அவரைவாயாரபோற்றிநாம் தூணடவே
கோவிந்தன்நம்முள்ளேகுடியாரே கூவியழுதளிக்கும்படியாரே நந்த

விருப்பாக்ஷகர் தரு.

ஆரையா அந்தணே நில்லும்
நான் அழைப்பதற்குபதில் சொல்லும்
வாரும்வாரும்எந்தன் வளமனை தன்னிலே
சீரும்பெருகுவாய் சிறப்பாய்என்முன்னிலே

வாமனவின்பன் தரு.

ஏனையா அழைத்தீர்கள் கூறும்
என்ஏழைமுகத்தைநன்றாய்ப் பாரும்
தீனதயாபரசேக தீசன்போல்கண்டேன்
கானலினால்வந்த களைப்புமிகஉண்டேன்

விருப்பாக்ஷகர்-தரு

எந்தஊர்எத்தேசம் சொந்தமே
எனக்குஉரைப்பாயுன் பந்தமே
இந்தவேளைதானே இன்னமும்வேருண்டா
சந்தேகமில்லாமல் சாற்றுவாய்நீகண்டா

வாமனவின்பன் தரு.

தஞ்சமென்றடைந்தேன் ப்பானுமே
சாற்றுவேன் தயவாக சேளுமே
கஞ்சபுரம்என்ஊர் கருவா தரைமேலே
கெஞ்சிபிச்சைகேழ்க்க கெட்டிஎந்தன்வேலை

விருப்பாக்ஷகர் தரு.

இருந்தாலும்இருக்கட்டும் வேதியசு
நான்இன்னமொன்று சொல்வேன்நீதியா

மருந்தாய்எனக்குதித்த மகள்தன்னைஇப்போது
இருந்தாலுநீர்கொள்வீர் இந்தாதந்தேன்தோது

வாமனவின்பன் தரு.

ஐயரேநான்பிச்சைக் காரேன்
அடுக்குமோஇவ்வார்த்தை பேபாரேன்
வையகத்தோரெல்லாம் வைவாரெனைக்கண்டு
தையலொன்றைத்தள்ளி சாற்றுவீரென்முன்னே

விருப்பாக்ஷகர் தரு.

எந்தன்மகளுக் கேத்தவர்
எங்கிலும்போனதில்லை நேத்தவர்
இந்தஉலகத்தோர் எவர்சொல்லும்ஏற்காது
தந்தேன்பெண்ணையுனக்கு சத்தியம்தப்பாது

வாமனவின்பன் தரு.

எந்தன்விதிப்படியே யானும்
எடுக்கிறேன்பிச்சைகள் மேவியே
உந்தன்மகளுக்கு ஒக்குமோஇப்பிச்சை
வந்தனம்தந்தேனே வேண்டாம்அதுலச்சை

விருப்பாக்ஷகர் கந்தார்த்தம்.

பூதேவிமனதையொத்த புனிதனேசொல்வேன்கேளும்
மூதேவியகன்றுவிட்டால் முகத்தினில்முழித்தபோதே
சிதேவிதானேவந்தால் திட்டியேதள்வாருண்டா
மாதேவியரியச்சொன்னேன் வாமனவின்பதேவா.

வ-ம். ஆனால்கேளும் பிராமணா என்மகளாகிய கௌரியம்மனை இந்தசபையாறரிய ஆகாசவாணி பூமாதேவிசாக்ஷியாக உமக்குதாரதத்தம்செய்து கொடுத்தேன் வாங்கிக்கொள்ளும் அந்தணரே.

விருப்பாக்ஷகர் தரு.

மறையவர்பதியேமகளைகொள்ளும் இறையவர்நிதியே
தரையும்வானமும்சாக்ஷி தாரேனுனக்குபெண்ணை
நிரையும்தத்தம்செய்தே நீநம்புவாஎன்கண்ணே

சுபாவிரதை தரு

ஐயரேஇதென்னமோசம் செய்யவேண்டாம்இந்தவேளை
நில்லும்சுவாமிநில்லும் வையகங்கள்தன்னிலுண்டா
தையலரியாமல்கந்தம் சொல்லும்சற்றுநில்லும்

விருப்பாக்ஷகர் தரு.

பட்டிமுண்டைமுதல்முதல் தொட்டதலைக்
கிடாய்வந்தாய் யோடிவந்தாய்
மட்டிசமையத்திலீயும் கிட்டிலந்துநில்லும்
மென்றாய்போடி எட்டிப்போடி

சுபாவிரதை தரு.

கன்னிநான் அரியாமலே உன்னிதசமையமேது
நாதாபிராண நாதா
அன்னியதேகியொருவன் முன்னிலைநிற்பதைசொல்
வேதாசொல் வேதா

விருப்பாக்ஷகர் தரு.

அன்னியனென்றெண்ணவேண்டாம் கன்னியாள்மகளுக்
கேத்தநாதன் பிராணநாதன்
என்னிடமனதிலிவர் நன்னிதியுள்ளவரென்று
யேற்றிட்டேன் தாரை வார்த்திட்டேன்

சுபாவிரதை தரு.

அந்தணரேவாருங்காணும் சொந்தமுள்ளஊரும்பேரும்
உண்டாஇவர்க்கு உண்டா
இந்தவிதிபிச்சையோர்க்க வந்தவர்க்குபெண்ணைத்தர
நன்றோஇது நன்றோ

விருப்பாக்ஷகர் தரு.

அஞ்சனவிழியாளே கிஞ்சுகமொழியாளே
கேளும்நன்றாய் கேளும்
வஞ்சியரேதெரிந்துகொள்ளும் கஞ்சபுரம்இவர்க்குசொந்த
ஊருசொந்த ஊரு

சுபாவிரதை தரு.

ஊரிருந்தாலிருக்கட்டும் கூறும்குலகோத்திரமும்
வேண்டும்அது வேண்டும்
பாருமஇவர்சூஸ்திரமும் சீருஇவருக்கில்லை
காணுமேநன்றாய் தோணுமே

விருப்பாக்ஷகர் தரு.

பாத்திரங்கள்கொண்டவர்க்குகோத்திரம்குலங்களுண்டா
சொல்லும்அடி விள்ளும்
சூஸ்திரம்தெருந்திருந்து யேத்திடவேதத்தபசெய்தேன்
கொள்ளபெண்ணைக் கொள்ள

சுபாவிரதைகந்தார்த்தம்.

என்னமதிஉந்தனுக்குபிராணநாதா
எண்ணிப்பாரிவர்தனக்கு வேணருத்தம்
முன்னேபிச்சையெடுப்பதுடன் முறையோயில்லை
முக்கியமாய்குரிகுணம்நாம் கண்டதில்லை
பன்னுமறையுணர்ந்தவரோ தெரியவில்லை
பண்பழக்கருஸ்திரநாம் கண்டதில்லை
சொன்னதெல்லாம்போனாலும் இன்னமொன்று
சொல்லுவேன் அவன்குலத்தை விள்ளுவேனே.

வ-ம். ஆனால் கேளும்பிராமணா நமக்கு முன்பின் உரவில்லை அவன் குலம் கோத்திரம் தெரியாது மறையென்னப்பட்ட வேதமுணர்ந்தவனோ தெரியாது மேலும் பிட்சைஎடுப்பவன அதுவும்தவிர வைஷ்ணவநாமம் வைத்துக்கொள்ளுகிற பிராமணன் நாம்சைவம் எப்படி பெண்கொடுக்கலாம் சொல்லும் பிராமணா.

சுபாவிரதை தரு.

சுத்தவைஷ்ணவம்பார்த்தியா இவர்க்குபெண்ணை
ஒத்துக்கொடுக்க நேத்தியா
சுத்தமானஉடம்பை சுட்டுக்கொளுத்தியே
குத்தமதாகவே கூறுவாய்சைவநிந்தை
கொக்குபோல்நரைத்தீரே உனக்குவெட்கமில்லையா
இக்கணம்இப்புத்தி ஒக்குவிதம்சொல்லையா சுத்த

விருப்பாக்ஷகர் கந்தார்த்தம்

எப்படிதான்எந்தனுக்கு பெண்ணேநீயும்
எடுத்தெடுத்துஉரைத்தாலும் இனிகேளேநான்
மைப்படியந்தகன்னியராம் மகளுக்கேத்த
மாப்பிள்ளைஎன்மனதில் கொண்டேன்கொண்டேன்
கைப்பிடியாய்பிடித்தவர்க்குத் தத்தம்செய்த
கடும்மொழியேஇனிதவரி நடக்கேனுந்தன்
சொற்படிநடந்தாலும் விதிவசம்தான்
சொல்லுவேன்உந்தனுக்குச் சொல்லுவேனே

வ-ம். ஆனால் கேளடிபிராமணத்தி சைவம்வேரு வைஷ்ணவம் வேறில்லை தொட்டகுறை விட்டகுறையிருந்தால் விட்டுப்போகுமா நல்லகுணவான் அழகில்மன்மதன் எவ்வர்னமான மாப்பிள்ளை மேலும் நான் அவருக்கு என்மகளாகிய கௌரியை தாரதத்தம்செய்துவிட்டேன் இனிதவரிநடக்கமாட்டேன் உன்வார்த்தையைதிருத்தும்

விருப்பாக்ஷகர் தரு.

தொட்டதுவிலக்கிவிடுமா விட்டதுசொன்னேன்
பட்டதுபழுது போகுமா
வட்டவிழியேசைவம் வைஷ்ணவம்வேறில்லை
சுட்டுக்கொளுத்திகூகொண்ட தோதகம்நமக்கென்ன
சொல்லும்குணத்திலும்நல்ல வரியவரே
மெல்லிக்கிவாய்த்தது தொல்லையின்பவரே தொட்

வாமனவின்பன் தரு.

ஐயரேவழக்கென்ன நில்லும்
உன்னையார்கேட்டார்பெண்ணதை சொல்லும்
தையலும்நீருமாய்சணடைப் போட்டுக்கொண்டால்
வையகம்நகைக்குமே வழியப்போரேன்கண்டாய்

விருப்பாக்ஷகர் தரு.

இந்தாஇந்தா நில்லுமையனே
பெண்குணம்இப்பவே கொள்ளும்துய்யனே
பந்தாரணிகுழலி பாவையேஉன்னாலே
வந்தவர்சும்மாப்போரார் வாயாடிபின்னாலே

சுபாவிரதை தரு.

அந்தணாபோகட்டும் தடுக்காதே
உனக்கறிவுகெட்டுப்போச்சுதே கெடுக்காதே
எந்தஊர்பிராமணன் இங்கவந்தான்பாவி
எந்தவழியைசொல்லும் இருக்காதேநீமேவி

வாமனவின்பன் தரு.

இக்ஷணம்நான் போரேனம்மா
என்னையேசாதே வாயினால்சும்மா
என்னைப்பேசாதேபிச்சைக்குவந்தேனான் பெண்ணுக்குவல்லையே
லச்சையாய்வந்தது நடுவழிதொல்லையே

விருப்பாக்ஷகர் தரு.

போகாதேபோகாதே ஐயரே
எந்தன்பொற்கொடி தனைகொள்ளும்துய்யரே
ஆகாதமுண்டமே அப்பாலேநீபோடி
நோகாதமனம்தன்னை நோகசெய்தாயடி

சுபாவிரதை தரு.

ஏங்காணும்புத்தியில்லையா ஓடி
ஏன்சும்மாமருக்கிறீர் வாடி
இன்னமும்பெண்கொள்ள எண்ணஉனக்குமுண்டா
சொன்னதுநல்லபுத்தி சுருசாய்நடவுகண்டாய்

வாமனவின்பன் தரு.

பாரும்பாருமுந்தன் தேவி
சொல்லபதைக்குதேஎந்த னுடலாவி
ஊரும்ஒடும்எனக்கு ஒக்கவேபெருக்கவே
பேரும்என்கெடவேண்டும் பேசாதிருக்கவேண்டும்

விருப்பாக்ஷகர் தரு.

பெண்ணைத்தருக வல்லோனே
நான்பேசாதேஇரு மருகோனே
எண்ணங்கொண்டமுண்டை எட்டினில்லும்போடி
திண்ணமேயவருக்கு செய்வேன்மணமும்நாடி

சுபாவிரதை தரு.

நரைச்சும்கிரிச்சைக்கெட்டுப் போச்சுதா
இந்தஞாயம்நன்றாய் யுனக்காச்சுதா
கரைத்துகரைத்துபுத்தி காட்டினாலுமுனக்கு
திருத்தப்படவுமில்லை திரும்பமனமுனக்கு

வாமனவின்பன் தரு.

மறைக்காதேஎந்தனை அந்தணு
உந்தன்மகளைக்கேழ்க்கயானும் வந்தேனு
தரிக்காதுஎந்தன்மனம் சற்றுநேரமிங்கே
குரிக்காதேஇனிமேலே குற்றமாகுந்தகம்

விருப்பாக்ஷகர் தரு.

உனக்கென்னநீநில்லும் வேதியா
நான்உரைத்ததுதவிர்வேனோ நீதியா
உனக்கதிகாரங்கள் ஒருக்காலும்படியாது
எனக்கல்லோபாரங்கள் உனைவிடமுடியாது

சுபாவிரதை தரு.

சொன்னதையம்மட்டில் நிருத்து
நான்சொல்லவேணுமா குரித்து

சன்னிறனில்லாவிட்டால் கடைத்தேருவிதமேது
என்னஎன்ருலாகும் இப்போசெய்யும்வாது

வேறு கௌரி தரு.

இந்தசில்லும்எந்தன்தாயே இரைச்சலிட்டுமே
அம்மா கரைச்சலிட்டுமே
எந்தன் தந்தை நிந்தைசெய்வதென்று
சங்கதியதை பன்னுமுன்னது

சுபாவிரதை தரு.

சங்கதிசேர்க்கு மங்கைமகளே
தாழ்வுவந்துற்றது இருக்கும்வாழ்வுபிரிந்ததே
திங்கள்வதனி பங்கயமடையசென்றுமோ
அங்கப்பூரித்து அலரெங்குநின்றுமோ

கௌரி தரு.

தேடிக்கொண்டகோடியென்று செப்புமம்மணி
உள்ளதை ஒப்புமம்மணி
சேடனைக்குகோடிசெய்தனை தெரியசொல்லுவீர்
தந்தைவிதியறிந்து சொல்லுவீர்

சுபாவிரதை தரு.

அருந்தவம்செய்து வருந்திபெற்று
அன்பாய் வளர்த்தேனுனை
பாந்தபிச்சை எடுப்போனுக்குன்னை
பாரியென்றுதத்தஞ்செய்தார் தேரிநின்றுமே

கௌரி கவி.

எந்தனைப்பெற்றதாயே இதற்குநீவினைப்பவேண்டாம்
வந்துமேநிந்தைகேட்டவா மனனுக்கெல்லைனத்தானே
தந்தையர்தத்தஞ்செய்தார் தவறிவமாட்டேனம்மா
நிந்தைவையாதுசொல்சண்டு விளம்புவாயறியத்தானே.

வ-ம். ஆனுல்சேரும்தாயே என்னை தந்தையானவர் இப்போது அந்தபிராமணனுக்கு தாரதத்தஞ்செய்தார் இனி அந்தவார்த்தையைதவறி நடக்கமாட்டேனம்மா தாயே.

கௌரிதரு,

அருமைபெருந்தந்தைமனம் தேற்றுமையனே
அம்மாளோடுசெண்டையென்ன கூறுமையனே

விருப்பாக்ஷகர் தரு

பெருமையுள்ள உனக்குமணம்
பேசிமுடிக்க அம்மாபேசிமுடிக்க
பேதைகுணதாயும்வந்தாள் குருக்கமறைக்க

கௌரி தரு.

எந்தஊருமாப்பிள்ளைக்கு என்னைக்கொடுக்க
தந்தைமே என்னைக்கொடுக்க
இசைபடகொண்டீர் அனைவரொல்லும் அன்புபெருக்க

விருப்பாக்ஷகர் தரு.

அந்தஊருகஞ்சபுரம் அறியும்மணி
அயர் அறியும்மணி
அங்கிருந்துவந்தானுனக்கு பிரியனகலா மணி

கௌரிதரு.

என்னகுலம்என்னதொழில் செய்பநல்லவர்
என்னைவந்துமாலைசூட்டி ஏர்க்கலல்லவர்

விருப்பாக்ஷகர் தரு.

பின்னமில்லாமறைகுலமே பிச்சைஎடுப்பவர்
பெருமாள்ராமபஜனைசெய்து பிரியமேகர்ப்பவர்

கௌரிதரு.

வையம்தன்னில்சிவனைவையும் வைஷ்ணவரோடு
வாழுநாளில்பூஜையென்ன வழக்கம்நீகாடு

விருப்பாக்ஷகர் தரு.

உய்யும்வழிதனைதெரிந்த உனக்குநானுமே
ஓதுவதுநல்லதல்ல உறைத்தேனம்மணி

கௌரி கலி.

தந்தைநீசம்மதிக்கு தனியாகவந்தவர்க்கு
எந்தனை தரவிசைந்தால் என்மனம்உன்மனம்போலாகும்
இந்தணாபரனெழுக்கத எவராலும்விலக்கப்போமோ
வந்தவாரெங்கேசொல்லு வளைலேபோறதீபோற்றி

வ-ம். ஆனல் தேளுந்தந்தையே பிச்சைக்கிவந்த பிராமணனு க்கு நான் பாரியாளாக வேண்டுமென்று விதியிருந்தால் தடுக்கமுடி

யுமா அவ்விதம்போல் எனக்காக நேமித்தபிராமணர் எங்கே சொல்லும் தந்தையே.

விருப்பாக்ஷகர் கவி.

புத்தியில்மிகுத்தஎந்தன் பொற்கொடிமகளேயம்மா
இத்தெருவீதிசென்றார் இவர்தான்நீபாருமம்மா.

ஆனால் கேளும் குமாரசெல்வி உனக்காக நேமித்த புருஷன் இதோ இருக்கிறார் பாருமம்மா.

கௌரி கொச்சகம்.

நற்றவங்கள்மிகவிழைத்த நங்கையென்னையன்புடனே
பெற்றெடுத்தஎன்தாயே பெருமைதிருவடிசரணம்
இத்தெருவில்பிச்சையவர் இரக்கவந்தோரென்கணவர்
குத்தமில்லைஅவர்க்கென்னை கொடுக்கமனஞ்சம்மதிப்பீர்.

வ-ம் ஏதோ என் தலைவிதியானது பிச்சை எடுப்பவர்க்குமாலைசூட்டும்படியாக என் தந்தையானவர் நேமித்துவிட்டார் அவர்வார்த்தையை தட்டக்கூடாது அவர் இஷ்டம்போல் என்னை அவருக்கு திருக்கலியாணம் செய்துவையுமம்மா தாயே.

சுபாவிரதை தரு.

ஞாயமாமகளே ஞாயமா
ஞாயமல்லசொல்லும்மொழி சேயெந்தன்ஞானவழி
ஏழையைப்போலலைந்து தேசம்சுற்றினவர்க்கு
பேசும்மணமுடித்தாலே நேசபந்துக்காகாது
பெண்ணேஅவரைநீயும் எண்ணவேண்டாம்போடி ஞா

கௌரி தரு.

விதிப்படியம்மா விதிப்படி
விதிப்படிநடந்துகொள்ள மதிப்படிநடந்துவிள்ள
நீதிக்கணவனுமே ஓதும்விதிப்பயனே
மேழியேநித்தியம் மதுவிட்டுமேபோகாது
புத்தியில்கிடைப்பதுபோல் எப்படிகிடைக்குந்தாயே
பொங்கமாய்எண்ணியே மங்களமணமுடியும்

சுபாவிரதை தரு,

கெட்டுதோசைவம் கெட்டுதோ
கெட்டுதோசைவமுள்ள தொட்டுதோவைஷ்ணவம்பின்னே

விட்டதினல்பரமன்பூசை சுட்டுகொள்ளகாலமாச்சே
வேருயோசனைக்கொள்ளாதே நீருபூசுவதைவிள்ளாதே
நிந்தனைக்கிடமுண்டாகும் எந்தன்கண்மணி கெட்

கௌரி தரு.

உரியதோவார்த்தை வார்த்தைஉரியதோ
உரியதோநீசொல்லும்பேச்சி அரிசிவனென்ருச்சி
விரியும்உலகுயிர்க்கும் நிரையும்தேவன்ஏகநாதன்
வெவ்வேருவந்தானுகி அவ்வேருசமையஙகோரி
அங்கங்குநாதனுகி தங்குவார்பரமனுகும் உரிய

சுபாவிரதை கந்தார்த்தம்.

பன்னிபன்னிமொழியுரைக்கும் மகளேகேளாய்
பரமனர்தனைத்தொழுது உன்னைப்பெற்று
துன்னிபெரும்பியோனிக்காய் பகலோன்காய்ந்து
சூழாதுஇருநான்கு வயதுமேதான்
கன்னியமாய்என்னுயிர்போல் வளர்த்துநல்ல
கட்டழகுநற்குணமும் வாய்த்தபேர்க்கு
என்இஷ்டம்போல்நான் களித்து கொடுக்காமுன்னம்.
என்னவிதிஉந்தனுக்கு வந்ததம்மா

வ-ம். கேளுமம்மா குமாரசெல்வி உன்னைபெற்று வளர்த்து என் இஷ்டம்போல் நல்லமாப்பிள்ளைக்கு கொடுக்காமல் உன் தகப்பனர் பிச்சைக்குவந்த பிராமணனுக்கு உன்னைகொடுக்க சம்மதித்தார் அப்படி அந்தமாப்பிள்ளைக்கு உன்னைக்கொடுத்தால் இந்தஉலகத்திலுள்ளவர்கள் நகைப்பார்கள் இந்தவார்த்தைசரியல்லஅம்மணி

சுபாவிரதை தரு.

ஏனேயிப்படிபேசுரீர் விதியுனக்கு
தானேவந்துமே நேர்ந்தது
ஈனமானமில்லாமல் இரப்போர்க்குனைகொடுத்தால்
நானிலம்பழிக்காதோ நானென்னசெய்வனடி ஏனே

கௌரிகந்தார்த்தம்.

எத்தனைதான் எந்தனுக்குத்தாயேநீயும்
எடுத்தெடுத்துபடித்தாலும் இனிகேளேநான்
கர்த்தனவர்எழுதும்விதி கடக்கப்போமோ
கருத்ததைப்போல்நடந்தால் தான்கைகூடுமம்மா

இத்தரையில்பிச்சைகொள்ளும் மறையோர்தானும்
எனக்கென்றுவிதியிருந்தால் தடுக்கப்போமோ
குத்தமில்லைதந்தைதவர் சொல்படியேநீயும்
குறுக்கொன்றும்பேசாமல் கொடுப்பீரம்மா

வ-ம். ஆனால் சேனும்தாயே என்தந்தைமொழி தவராமர்படி வந்துயாசகம்செய்கின்ற பிராமணருக்கு என்னைவிவாகம்செய்துவை யுமம்மாதாயே.

கௌரி சுபாவிரதை ஸ்ருப்பாக்ஷா வாமனவின்பன்

தரு.

கூருமண முடிக்கவே
மனதைவொத்து சேருமணமுடிக்கவே
ஊருதேசங்கள்சுற்றி கோரய்வந்தவர்தன்னை
சீருமாருபண்ணமல் சித்தமிககளித்து கூரு

சுபாவிரதை தரு.

சின்னபிள்ளையானதினால் என்னிடவார்த்தையைதள்ளி
வீசுராய்ம்மா பேசுராய்

கௌரி தரு.

முன்னவன்விதித்தவிதி தன்னையறியாமல்நீயும்
பேசுராயம்மா வீசுராய்

வாமனவின்பன் தரு.

போதும்போதும் போரேனம்மா
மாதருக்குள் வழக்குவேண்டாம்
போரேனுகம்மா போரேனன்

விருப்பாக்ஷர் தரு.

ஓதுமொழிதவராது மாதவரேபோகவேண்டாம்
நில்லுமேசற்று நில்லுமே

சுபாவிரதை தரு.

வேதியரேகேளுமுந்தன் சாதிவகைசப்பலாச்சே
வெருக்காதே என்னையுருக்காதே

விருப்பாக்ஷர் தரு.

ஓரியுணர்மகளுக்காய் வேதியனைவரச்சொன்னேன்
கூவியானு மேவி

கௌரி தரு.

எந்தன்தலைவிதியாலே தந்தைதாயும்
மனங்கலங்கலாச்சுதே விதியாச்சுதே

வாமனவின்பன் தரு.

இந்தஊரில்பிச்சைக்கி வந்ததினுலென்பவிஷி
போச்சேஐயா போச்சே

சுபாவிரதை தரு.

பிச்சைக்காரன்மேலே பெண்ணுக்கு இச்சைபட்டகதைபோலே
ஆச்சுதே துரோகிஆச்சுதே

வாமனவின்பன் தரு.

லச்சைவேண்டாம்உனகளுக்கு இக்ஷணம்இதோ
போரேனுன் தியாகியானும்போரேனுன்

விருப்பாக்ஷர் தரு

வந்தஐயர்தன்னைநீயும் இந்தப்படிபேசலாமோ
நில்லடிமுண்டை நில்லடி

கௌரி தரு.

தந்தைதாயும்இப்படிக்கி குந்தகம்செய்தாலேதாலி
கட்டவோஇன்பம் கிட்டவோ

சுபாவிரதை தரு.

எப்போதென்றிருந்தீரோ தப்புகொட்டுந்தாதனிவர்
எட்டவேதாலி கட்டவே

கௌரி தரு.

இப்படிநீசொன்னதினல் தப்பாமல்வருமுனக்கு
தீதுஅம்மா தீது

வாமனவின்பன் தரு.

இன்னேரம்பொருத்துக்கொண்டேன் இன்னம்
பொருக்கலாமா போரேனம்மாபோரேன்

விருப்பாக்ஷகர் தரு.

முன்னவன்மேலாணையில்லும் சொன்னபடிபெண்ணுனக்கு
தாரேன்பெண்ணைத் தாரேன்

கௌரி கவி.

மருவுருங்குழலிதாயே வந்தயாசகர்க்குஎன்னை
இருவர்க்குமுன்சென்மத்தில் எழுத்தொன்றுய்முடிந்திருந்த
திருவருட்டியேதந்தை தியாகிக்குமனதுஒத்தார்
குருவருளென்றுஎண்ணுங் குற்றமுமில்லைத்தானே.

சுபாவிர்த்தை கவி.

இருவர்க்கோர்குற்றமில்லை இருந்தாலும்கொள்ளலாகும்
தவருகள்காணுசைவம் தவரில்லாதவராமாயன்
அவருரைவயிணவர்க்கு அனுஷ்டித்துதிரியுமந்த
பகருதான்வேறென்றில்லை பட்சபபோல்நடந்திடாயே.

வ-ம. ஆனல் கேளும்மகளே அவன்வைஷ்ணவ பிராமணனை படியால் எனக்குமனம் சம்மதமில்லை உங்கள் இஷ்டம்போல் நடத்துங்கோள் எல்லாம்பின்னல் சொல்லுகிறேனடி மகளே.

கௌரி கொச்சகம்.

முந்துமறைபலகலைகள் முற்றுமரகற்றுணர்ந்த
தந்தையுடதன்மனமபோல் தாயவளுஞ்சம்மதித்தாள்
வந்தவரெந்தனுக்கு வள்ளல்சிவன்தனைபோற்றி
சொந்தமாய்சபைக்குமுனனல் தொலமணமுடித்திடாயே.

வ-ம், ஆனல் கேளும்தந்தையே உன் இஷ்டம்போல் தாயானவள் சம்மதித்தாள் இனி தடையில்லாமல் முகூர்த்தம் நடத்தும் தந்தையே.

விருப்பாக்ஷகர் தரு.

ஆகாகாமெத்தசந்தோஷம் வந்த
அந்தணர்க்கே சுபேஷ்டம்

சாகாவரம்தரும் சங்கரனருளாலே
வாகாய்மகளுக்கு வாழ்வுண்டுஇனிமேலே ஆ

என்னிடஇஷ்டரே வாருங்கோள்
இப்போஎன்சொற்படியே இனிநீசேருங்கோள்
பின்னமில்லாமலே பிராமணவீதியில்
நன்னயஅலங்காரம் நாட்டவேஒதுவீர் ஆ

மாமறையோதும் என்செல்விக்கு
மணம்செய்யமாமதி வதனிக்கி
பூமலர்குழலிக்கி புதியச்சேலேக்கொண்டு
வாயம்மாவிந்துமேல் வளரசெய்வீர்கண்டு ஆ

வாசலில்பந்தலே நாட்டுவீர்
வாழைக்கமுகுகள் கூட்டுவீர்
தூசுகொண்டுத்தியே தோன்றசெய்வீதியை
பாசமானஎந்தன் பாவைக்குமணம்செய்ய ஆ

விருப்பாக்ஷகர்தரு.

அந்தணமாரெல்லாம் கூடினார்
பெருமானந்தகூத்துக ளாடினார்
மந்திரமறையவர் பாடினார்
நல்லமங்கைமார்கள்வெகுபேர் கூடினார்
மாலேமணப்பந்தல் தீட்டினார்
நல்லமல்லிகைப்பூபந்தல் சூட்டினார்

சாலுங்கரகமு நாட்டினர்
அநகேசகலவைபோகமுங் காட்டினர்
அம்மியரசாணிக் காலதை
கொண்டு அமைத்தார்பந்தலுக்கு மேலதை
வாசலின்முன்பாக செம்மரையாசனம்போல்
செய்தார்மணவரை மேலதை
ஆலித்து அந்தணர் சீராட்ட
நல்ல அவரவர்மந்திரம் பாராட்ட
தாலிகௌரிக்கு கட்டினன்
தப்பாமல்வாத்தியம் கொட்டினர்

வாமனவின்பன்-கவி.

வஞ்சியை தானமாக மணமதுசெய்தமாமா
சஞ்சலமெல்லா நீக்கி சகலவைபோகம்பெற்றேன்
பிஞ்சுமாமதியணிந்த பெருமானருளைப்பெற்ற
தஞ்சமென்றன்புகூர்ந்து தாளிணைபணிந்திட்டேனே

விருப்பாக்ஷகர்கவி.

மாதவம்பெருகியோங்கு மறையவர்மகளேயம்மா
பாதத்தைபணிந்தநீ சௌபாக்கியமாய்என நம்வாழி

வ-ம், ஆனால் சேனம்மாமா உன்மகளை எனக்கு கலியாணம் செய்து சகலவைபோகங்களும தானமாககொடுத்தீர் நேக்குசந்தோஷம் நான் போய்வருகிறேன் மாமா.

சுபாவிரதை-கவி.

மாதுநான்மனதுபொங்கி மயக்கியேஇருக்கும்போது
எதுனுஞ்செய்யப்போறேன் இருவருவாழித்தானே.

வாமனவின்பன் தரு.

அஞ்சலிசெய்து கின்றேன்மாமா
யான்போகஅன்பாய் விடைதாருமேமா

விருப்பாக்ஷகர் தரு.

சஞ்சலம்தா னில்லாமல்சென்று
தையல்மனம்நோகாந்திடாமல் வாழ்வீரின்று

கௌரி தரு

ஐயாஎன்தந்தையரே அடிபணிந்தேன்
கூட்டி அனுப்புவீர் காதன்பின் அனுப்புவீர்

சுபாவிரதை தரு.

கூசுமெதனக்குமன மிந்தகொடுமைக்கி
கோதைநானென்னசெய்வேன் பரமனுரே

சௌரி தரு.

அன்பிடஅடிபணிந்தேன் போக
அனுப்புவாயவிடைசொல்லி அனுப்புவாயே

சுபாவிரதை தரு.

என்னைவந்துபணிந்ததாலே யம்மா
என்னநான்செய்வனடி சும்மா

சௌரி வேறுதரு.

வாருவாருமெந்தன் மாரா
அவள்வாழ்த்தாமல்போனாலும் போராள்
அதில்வளப்பம்வேண்டா முனக்குசிரா
நாமுஞ்வாழ்கலாம் மனைசென்றுநேராய்

வாமனவின்பன் தரு.

ஆகாஎன்னிரு கண்ணே
உந்தன்அறிவைஎன்னசொல்வேன் பெண்ணே
ஆசைக்கிசைந்திடும்வண்ண மயிலன்னமே
நடந்துவா சொன்னேன்

சுபாவிரதை தரு.

இதுக்குத்தானு பெற்றுவளர்த்தேன்
எரப்பவர்க்காகவே கொடுத்தேன்
எரியுதேஎன்வயர் கடுத்து
எரிப்பாரேஉடம்பெல்லாம் விடுத்து

விருப்பாக்ஷகர் தரு.

பேயாபிசாசடிமாதே நீயும்
பேசாதிருந்தா லிப்போதே
பேச்சியவளுடன் வாதே
இன்னமபேசினுல்வருதமே தீதே

சுபாவிரதை தரு.

இத்தனைத்துன்பம் உன்னுலே
பாவிஇஷ்டம்போல் நடந்ததினுலே

பெற்றபிள்ளைதன்னை இப்போ பிச்சைக்காரன்பின்னாலே
ஒத்து அனுப்பஎண்ணுது எண்ணுதுமேலே

விருப்பாக்ஷகர் தரு.

எத்தனைசொன்னாலு மாதே
இதைநீசொல்லாதே நீதே
சித்தம்கலங்காதே சீச்சீயப்புரம்போடி
குத்தம்இதனால்வரும் கோபம்கொள்ளாதேநீ

சுபாவிரதை தரு.

எண்ணினஎண்ணத்தை முடித்தாய்
உன்எண்ணத்தைப்போலவே நடித்தாய்
மண்ணாப்போகஉன்னை மனைக்குள்ளேவிடுவேனா
அண்ணாடம்உந்தனுக்கு ஆக்கிப்படைப்பேனா

விருப்பாக்ஷகர் தரு.

என்னவார்த்தையது இல்லடி அடி
எனக்குவீடில்லையா சொல்லடி
அன்னமும்எனக்கா அளிப்பவள்நீதானா
என்னஇருக்குது யீசனும்செத்தானா

கௌரி தரு.

தாலிஎனக்காக தரித்தீர்
நீங்கள்சந்தோஷங் கொள்ளாமலேஎரித்தீர்
வேலையில்லாததாயே வீண்வார்த்தைதொடுக்காதே
ஞாலத்திற்கடுக்காது ஞாயத்தைக்கெடுக்காதே

வாமனவின்பன் தரு.

மாமணத்தைமுடித்தீர் பழிக்க
மாராசண்டை தொடுத்தீர்
அழிக்கலாமாஇப்படிநீங்கள் அலங்கோலப்பட்டாலே
பாமோவந்தவிதி புகலுநீங்கள்மேலே

விருப்பாக்ஷகர் வேறுதரு.

புத்தியில்லாவித்தகிசுந்தசண்டை செய்தாளென்று
சித்தமதில்ஒத்துக்கொள்ள வேண்டாம்நீங்கள்
ஒத்தொன்றாய்வாழ்வீர்கள் வெகுவாண்டாய்

சுபாவிரதைதரு.

அந்தமில்லாவந்தவரை பந்தமுடன்சொந்தமென்று
உந்தன்சேயைதந்துவிட்டு எந்தன்மனைவிவந்தால்நீயும்
சிந்துசோரு தந்திடேனையாது

கௌரி தரு.

அப்பாநுயம்இப்படிதான் செப்பினூலும்செப்பிடுமே
தப்பிதம்எப்பவுமில்லை கைப்பிடித்துமெப்புகொள்ள
இப்போஎன்சொல்படி ஒப்பியேவாரும்

வாமனவின்பன் தரு.

கட்டழகிவிட்டகுரை விட்டளவும்பட்டளவும்
பட்டுபட்டுவாரதுண்டு தொட்டுபுவியுள்ளளவும்
கிட்டிபிரந்திட்டகுரை கெட்டியென்றுநடந்தேரும்

கௌரி கவி.

வந்தனம்பிராணநாதா வளர்நகர்மதுரைவிட்டு
தம்மில்லரமேவிட்டு தனிவழிகடந்தோம்நாமும்
இந்தநல்இடத்தில்வந்தோம் இதுஎந்ததேசம்சுவாமி
சொந்தஉன்ஊருமெங்கே சொல்லுவாயரியத்தானே.

வ-ம். ஆனுல் கேளும் பிராணேசா என்தந்தையர் வாசம்செய்யப்பட்ட மதுரையைவிட்டு இவ்விடம்வந்தோம் இதோ தெரிகின்ற தேசம் எந்தஊர் உந்தன் சொந்தகிராமம் எதுதெரிவிப்பாய்பிராணநாயகா

வாமனவின்பன் கவி.

ஆசையென்பிராணதேவி அண்ணல்வாழ்மதுரையான
தேசமும்விட்டுநாமும் தெரிவையேஇத்தேசம்வந்தோம்
வாசமாய்என்னைப்பெற்றோ ரிடம்இந்தஊரேயாகும்
நேசமாய்இவ்வீதிவந்தால் நேரும்என்விடுதிதானே.

வ-ம். ஆனுல்கேளும் பிராணவதி இதோ தெரிகின்றதே அந்த தேசம்தான் நமதுகிராமம் இந்தவழியேசென்றால் நமதுகிரகம் செல்லலாமடி பெண்ணே பிராணவதி.

கௌரி தரு.

எந்தன்தந்தைதேசம்விட்டு உந்தன்தந்தைதேசம்வந்தோம்
எங்கனம்விடுதி எங்கனம்

வாமனவின்பன் தரு.

அந்தன்பிராணதேவி இந்தவீதிதாண்டிவந்தால்
அங்கனம்விடுதி அங்கனம்

மாதவவல்லிதரு.

அந்தணரேவாரும்வாரும் இந்தவீதிபாரும்பாரும்
அந்தணுவார மைந்தனும்

மாதவசீலர்தரு.

இந்தவீதிவருபவன் மைந்தனடிவேறேஇல்லை
நீத்துமேமகனை யேத்துமே

கௌரி தரு.

சொன்னவீதிதாண்டிவந்தோம் உன்னிடகுருவுளது
சொல்லுமேசற்று நில்லுமே

வாமனவின்பன் தரு.

கன்னல்மொழிமாதரசே என்னிடவிடுதிஇது
காணுமேநன்றாய் தோணுமே

மாதவவல்லி தரு.

என்னிடமகனேவாரும் உன்னிடவிடுதிப்பாரும்
எட்டிவாளெங்களைக் கிட்டிவா

மாதவசீலர் தரு.

பன்னியமறைவழியில் சென்றமுறைதானுணர்ந்த
பாலனே திவ்விய லோலனே

வாமனவின்பன் கவி.

திருவுரைமார்பன்பாதம் சேவிக்கும்தந்தைதாயே
இருவர்பொற்பாதம்தன்னில் இன்பமாய்பணிந்திட்டேனே.

கௌரிகவி.

வரும்விதிதனையுணர்ந்த மாமாவேமாயியுங்கள்
இருவர்பொற்பாதந்தன்னில் இன்பமாய்பணிந்திட்டேனே.

மாதவசீலர்கவி.

சாஸ்திரங்கற்றும்மென்ன சர்வமுமுணர்ந்துமென்ன
பாத்தியாவபயன்செய்த படுமோசசுடலைதன்னை

காத்தவன்மதத்துப்பெண்ணை கடிமணம்செய்துவந்தான்
ஆத்திரம்பெறவேநெஞ்சம் அதும்புதேஎன்னசெய்வேன்.

வ-ம். ஆனல் கேளடிப்பெண்ணே பிராணவதி சுடலைக்காத்த பரமசிவத்து அன்புசெய்கிற சைவமதத்துப்பெண்ணைகொண்டுவந்து விட்டான் அதனுல் என்மனமானது யேங்குதடி பெண்ணே பிராணநாயகி

மாதவவல்லிகவி.

அந்தணசரிதானிந்த ஆகாதபையலாலே
வந்ததுநமக்குத்தீம்பு வைஷ்ணவமதமுங்கெட்டு
சிந்தவேகாலமாச்சு சிவமதப்பெண்ணலிப்போ
வெந்தணல்போலேநெஞ்சம் வெதும்புதுஎன்னசெய்வேன்.

வ-ம். ஆனல் கேளும் பிராமண சிவமதத்துபெண்ணைகொண்டு வந்தான் அதனுல் என்வயறெரியுதே என்னசெய்வேன் அந்தண.

மாதவவல்லி. மாதவசீலர். வாமனவின்பன். கௌரி

மாதவசீலர்தரு.

குலத்தைக்கெடுக்கவந்தப் படுபாவி
இந்தக்கோதையை எங்ககொண்டாய்நீமேவி
வலுத்தப்புலித்தோல் பாம்புவரைந்துகொண்டுமே
அலுத்துசுடலைகாக்கும் அவனைக்கண்டுமே

மாதவவல்லிதரு.

சுத்தமறைக்குலங் கெட்டுதோ
தொல்லைவைஷ்ணமத விட்டுதோ

செத்தபிணம்எலும்பும் செரித்ததினாலே
பித்தன்பெண்ணை கொண்டதினாலே

வாமனவின்பன் தரு.

மாசிவன்மதமென்ன குத்தமா
மாதவன்மதமென்ன சுத்தமா
யோசித்துப்பாரும்நீ ஒன்றிரண்டாகநேரும்
பேசிப்பேதம்கொள்ளாதே பிரியம்எங்கள்மேல்நேரும்

கௌரிதரு.

மாமிமாமனாரிங்கே வையவே
மங்கையெங்கேஎங்கே செல்வேனுய்யவே
பூமிதனிலேபெண்ணை புகழ்வதிகழ்வதில்லை
சுவாமியுங்களைவிடதையல் எனக்கார்சொல்லும்

மாதவசீலர் தரு.

இத்தனை தலைமுறை யாச்சுதே
இப்படிசெய்வாருண்டோ வாச்சுதே
பெத்தபிள்ளை தனாலே பெருமாள்மதம்தனக்கு
குத்தம்வந்துநேர்ந்துதே குலத்துக்குஇனிமேலே

மாதவவல்லிதரு.

எந்தன்வயரெரிய லாச்சுதே
இப்படிசெய்வாருண்டோ வாச்சுதே
மைந்தன்பேயாண்டிப்பெண்ணை மணம்செய்துவந்தானே
குத்தமுமாச்சுதே குலத்துக்கினிமேலே

வாமனவின்பன் தரு.

பன்னுமறையோர்க்கெல்லாம் சுத்தமே
பாரும்பெண்களாவில்லை குத்தமே
சொன்னவதிஷ்டன்முதல் தொல்முனியோரெல்லாம்
பின்னம்நடந்திருக்க பேசாதேநீகங்களென்னை

கௌரிதரு.

ஆதியில்மதப்பேத மில்லையே
நீங்கள்அடித்துக்கொள்ளுவதெல்லாம் தொல்லையே
பாதிமதியோனிடப் பாகமாய்
பேதப்படுவதில்லை பேசும்இரண்டுஒன்று

மாதவசீலர்கவி.

வட்டநேர்மதிக்குமேலா வதனியேசொல்லக்கேளாய்
கட்டியேபாம்புதானுங் கடித்துமேயொழியப்போகாய்
எட்டவேகுடிசைக்கட்டி இம்மாதையதிலிருத்தி
இட்டிடுவேலைதன்னை இவளாலேமுடித்துவாழ்வாய்

வ-ம். கேளும்பிராணவதி காலைக்கட்டிய பாம்பானது கடித்தால்தீருமே ஒழிய சும்மாப்போகாது ஆகையால் ஒருபோது நமது மகன் கொண்டுவந்துவிட்டான் எட்ட குடிசைக்கட்டி இவளை அதிலிருக்கும்படிசெய்து வெளிவேலையை செய்யும்படி செய்யலாமடி பிராமணத்தி.

மாதவவல்லிகவி.

ஐயரேஅவ்விதம்போல் அவளுக்கோர்குடிசைக்கட்டி
தையலையதிலிருத்தி சாற்றிடுவேலைதன்னை
செய்யவேசொல்லிவானும் என்திருமனைவரவொண்ணாது
பையவேதெருவினில்வைத்து பழங்கூழூற்றுவேனே.

வ-ம். ஆனால்கேளும் பிராமணா எட்ட ஓரிடத்தில் சாகைகட்டி அதிலிருக்கும்படி செய்து வெளிவேலையை செய்யச்சொல்லும் என் மனைக்கு வரக்கூடாது தெருவில்வைத்து பழங்கேவர்கூழ் ஊற்றுவேன் பிராமணா.

மாதவசீலர் கவி.

மைந்தனுங்கொண்டுவந்த மங்கைபாட்டிதன்னைஇப்போ
சொந்தமாய்மனைவராமல் தூரவேயொதுக்கிவைத்து
பந்தமுஅவள்மேல்வைத்த பருதியுமுதிக்காமுன்னம்
வந்திடுங்கடன்முடித்து வளமனைதன்னிலேதான்.

வ-ம். பரிதியாகிய சூரியன் உதிக்காமுன்னெழுந்து வீட்டிலுள்ள வேலைகளை செய்துவந்தால் மறுபடி என்தேவியானவள் ஏதாகிலும் உணவளிப்பாள் உண்ணலாமடி கௌரி.

மாதவசீலர்தரு

மாதேநீஎந்ததேசம்	ஓதும்எனக்குநன்றாய்
பேரும்	சொந்தவூரும்

கௌரிதரு.

மாதுமதுரைதேசம்	ஓதுவேன்கௌரி
யென்தன்பேரும்	சொந்தவூரும்

மாதவசீலர் தரு.

ஆரும்நீயிங்கே வாருமானேகுடிசை
தன்னைபாரும் நன்றாய்நீரும்

கௌரிதரு.

மானுள்மிகவும்பார்த்தேன் ஏனோஇந்தக்
குடிசைகூரும் நன்றாய்நீரும்

மாதவசீலர் தரு.

மனைக்கிவாரவொண்ணாது உனக்குகுடிசைதந்தேன்
இருக்க நீயும்பெருக்க

கௌரி தரு.

எனக்குசந்தோஷமுங்கள் மனைக்குள்ளேவேலைசெய்ய
நிற்க யானும்பெருக்க

மாதவசீலர் தரு.

வீட்டுவேலையுனக்கில்லை காட்டுவேலைதனைசெய்ய
வேணும் செய்யவேணும்

கௌரி கவி.

காட்டுவேலைகளென்ன நாட்டமுடனேசொல்ல
வேணும் சொல்லவேணும்

மாதவசீலர் கவி.

மங்கையெனுங்கௌரியே சொல்லக்கேளாய்
மாட்டுகொட்டடியில்சாணமதை யகற்றவேணும்
இங்கனமேதோட்டங் களைபரிக்கவேணும்
இஞ்சிஎவிமிச்சைக்கு நீர்விடுகவேணும்
அங்கனமேகாட்டுக்கு செல்லவேணும்
அடுப்புக்குவிறகுகொண்டு வருகவேணும்
நங்கைஎந்தன்தேவியேவல் செய்துபின்பு
நலமுடனேகூழளிப்பாள் உண்ணுவாயே

வ-ம். ஆனால் கேளடி உமக்குவேலை சூரியஉதையாதிக்கு முன்னெழுந்து முத்தம்தெளித்து பிறகு மாட்டுக்கொட்டடியிலுள்ளசாணங்களை அகத்தவேண்டும் தோட்டத்தில் சென்று இஞ்சி எலுமிச்சைக்கு ஜலம்கொட்டவேண்டும் கத்திரிக்கிகளை பறிக்கவேண்டும் பின்பு காட்டுக்குசென்று சுள்ளிஇல்லாமல் காய்ந்தவிரகாய் ஈரமில்லாமல்

வெரும்செதாளாய் கொண்டுவரவேண்டும் அதற்குப்பிரகு என்தேவி யானவள் சாதமளிப்பாள் சாப்பிட்டலாமடி கௌரியே.

கௌரி கவி.

ஐயரேஉந்தன்பாதம் அன்புடன்கரங்கள்கூப்பி
தையலாள்சரணஞ்செய்தேன் தயவுடன்எந்தனுக்கு
பையஉன்திருவாக்காலே பகருமுன்செய்யும்வேலை
செய்யகங்களித்தேனையா சித்தமுமகிழ்வீர்சுவாமி

வ-ம். ஆனால் சேளும்மாமா நீர்சொல்லப்பட்டவேலை செம்மையாக செய்கினறேன் முந்திமுதல் என்னவேலை செய்கின்றது அதை தெரிவிப்பாய் மாமா.

மாதவசிலர் தரு.

முன்னேஉனக்குவேலை சொன்னேனிப்பவேநீரும்
எந்தனைக்கேழ்க்கவந்தாய் நில்நில்நில்

கௌரி தரு.

முன்னேசெய்வதுஅதுஎன்ன வேலைகளென்று
சொன்னால்விரைந்துசெய்வேன் பார்பார்பார்

மாதவசிலர் தரு.

எய்யாதவளேபோடி செய்யாதவேலையினால்
ஒய்யாரம்பேசவந்தாய் நில்நில்நில்

கௌரி தரு.

பொய்யாமறையுணர்ந்த மெய்யாசெய்குவேன்வேலை
ஐயாகோபங்கொள்ளாதே சொல்சொல்சொல்

மாதவவல்லி கவி.

வல்லியெனும்கௌரியே வகைவகையாயுனக்குவேலை
சொல்லியேஇருக்கும்போது சோம்பேரிதனமாய்நீரும்
மெல்லவேமருத்துக்கேட்டால் மேன்மையிதல்லகண்டாய்
நல்லதுகோட்டில்சாணம் நங்கைமுன அகத்துவாயே.

கௌரி கவி.

மூல்மாமறைகள்தன்னை முடியுரஉணர்ந்ததமாமா
காலினலிட்டவேலை கையினல்செய்வேன்யானும்
ஆலகாலத்தையுண்ட அரனருளிதுவோவென்று
சாலவேகோட்டில்சாணம் தடங்கையால்வாரலுற்றுள்.

வ-ம். ஆனால் கேளும்மாமா நீர் காலினலிட்டவேலை கையினல் செய்வேனென்று கௌரியானவள் ஆலகாலவிஷத்தை அமுதாகக் கொண்ட சாட்சாதி பரமசிவத்தைநினைந்து தன்னுடைய திருகரத்தினல் சாணங்களை அகத்தும்படியாக நேர்ந்ததே என்று பகவானை நினைத்து தோத்தரிப்பது.

கௌரி தரு.

என்னகாலமோசிவனே ஏதுகாலமோ
வன்னிமானுமெந்தன் வனங்களும்பூண்டவா
என்னைஇவ்விதிக்கு என்வைத்தாய்ஆண்டவா என்ன
ஆலமுண்டவா அடியாரை யாளுகின்றவா
நாலுமென்றுசொல்லா நான்மறந்திட்டேனே
சிவசைவமறைநெறி தெரியாமல்கெட்டேனே என்ன
தொட்டுவிட்டேனே பூசைமறந்துகெட்டேனே
வட்டமதிசூடிய வள்ளலேஎந்தனை
கொட்டில்சாணம்வார குறிப்பிட்டாய்நிந்தனை என்ன

மாதவசீலர் தரு.

என்னடிகௌரிஇன்னேரமும்தவசி வேலைசெய்துமுடிந்ததா
கொட்டில்சாணம்வார பணிந்ததா
கன்னிகள்வெகுபேர்க ளுன்னைப்போலுலகத்தில்
கண்டித்தும்மட்டி கொண்டுவந்தான்சிமாட்டி

கௌரி தரு.

மாமாகோபங்கொள்ளலாமா இப்படிவிள்ள
மாட்டுசாணம்தன்னை வாரினேன்
வாரிவீட்டுக்கப்புறங்கொட்டி தேரினேன்
நேமாசொல்லும்வேலை மாமாசொல்லுமேலே
நிமிஷத்தில்செய்குவேன்பாரும் பேசாதேமாமாநீரும்

மாதவசீலர் தரு.

கத்திரிகளைகொத்தி ஒத்திப்பாரும்சுத்தி
கதலியும்எலிமிச்சைஇஞ்சிக்குநீர் சதமாகநீர்விடும்வஞ்சி
கத்துக்காட்டினில்சென்று மெத்தவெறகுகொண்டு
ஒட்டமாவாரும் நாட்டமனையைசேரும்

கௌரி தரு.

இட்டவேலைதன்னை கெட்டியாய்செய்வேன்
பின்னேபேசாதே எந்தனைசடிந்துநாளும்

ஆசாரமாய்செய்வேன் பணிந்து
கிட்டவேஇருந்து எட்டியேபார்த்து
கேவலமெண்ணாதே பாவைசொல்குண்ணாதே

கௌரி தரு.

அந்தணர்சொல்படிக்கு எந்தன்கைதனில்
குடமெடுத்தேன் குடமெடுத்தேன்
இந்தளவுமிச்சை அந்தக்கதலிக்கி
நீர்விடுத்தேன் நீர்விடுத்தேன்
ஐயன்செயலோவென்று கையில்களைக்கட்டு
கொண்டுதாங்கினேன நன்றாய்ஓங்கினேன்
பையக்கத்திரிசெடி உய்யக்களைபரிப்பேன்
ஓங்கி கரமோங்கி
தோட்டவேலைகளாச்சி காட்டுக்குயான்சென்று
ஓடித்தேன் விறகுஒடித்தேன்
வாட்டமாககட்டி நாட்டமாய்தலைமீது
எடுத்தேன் தலையில்எடுத்தேன்
வந்தேன்வேதியர்மனை அந்தசுமைஇறக்கி
விட்டேன் தரையில்விட்டேன்
இந்தணியீசரை எந்தன்மனதினில்
ஏற்றிட்டேன் யானும்போற்றிட்டேன்

கௌரிசொல் - தோத்திரம்.

படமுடியாதினித்துயரம் படமுடியாதரசே
பட்டதெல்லாம்போதுமிந்த பயந்தீர்த்திப்பொழுதென்
னுடலுயிராதியவெல்லாம் நீயெடுத்துக்கொண்டுன்
னுடலுயிராதியவெல்லா முவந்தெனக்கேயளிப்பாய்
வடலுறுசிற்றம்பலத்தே வாழ்வாயென்கண்ணுன்
மணியேயென்குருமணியே மாணிக்கமணியே
நடனசிகாமணியேயென்நவமணியே ஞானநன்மணியே
பொன்மணியே நடராஜமணியே.

கௌரிகவி.

கலையுணர்மாமாசொன்ன காட்டினில்சென்றுயானும்
விலையுயர்விறகுவெட்டி மெல்லியாள்விடுதிவந்தேன்

வ-ம். ஆனல் கேளும்மாமா காட்டினில்சென்றுவிறகுகொண்டு வந்தேன்மாமா யேதாகிலும் வேலையிருந்தால் கொடும்மாமா.

மாதவசீலர்கவி.

தலைவாசல்தன்னில்போடும் தையலேஇன்னவேலை
மலையதாநெல்லுகொஞ்சம் மங்கையேகுத்திடாயே.

வ-ம். ஆனால்கேளடி கௌரி என்னடி நன்னவெறகாய் இல்லை இருந்தாலிருக்கட்டும் இதோ இந்தஇடத்தில்போடும் இதோகொஞ்சம் நெல்லுயிருக்கிறது நல்லபதமாக இடியாமல் சீக்கிரம் குத்துவாயடி கௌரி.

கௌரிதரு.

தங்கவளையல்நான்குலுங்க தையலாளுமே
தடகரத்திலுலக்கைதன்னை தாங்கிகொண்டுமே
மங்கையாளுநெல்லுகுத்த மகிக்ஷியாளுளே
மங்கைப்பாகன்மலரடியை மனதிலூன்றினேன்
கஷ்டப்படகாலமாச்சே கங்கைநாதனே
கன்னியாளையாதரிப்பாய் காலகாலனே
இஷ்டம்போலநெல்லுகுத்தி யாச்சுதுமாமா
ஏந்திழையாள்பசிதணிய இயம்புநாதனே தங்க

மாதவசீலர் கவி.

மாதவவல்லிகேளாய் மங்கையாள்கௌரிதானும்
பேதமில்லாதவேலை பிரியமாய்செய்துவிட்டாள்
ஓதுவேன்அவட்குவேண உணவதையளித்துநீருங்
காதலாய்மனைக்குவந்து கடன்தனைமுடித்திடாயே.

வ-ம் ஆனால்கேளடி பிராணவதி இதோ கௌரியாள் நீஇட்ட வேலைகளெல்லாம் செய்துவிட்டாள் அவளுக்கு யேதாகிலும் உணவிருந்தால் தருவாயடி பெண்ணே பிராமணத்தி.

மாதவ்வல்லிகவி.

உவரிசூழலகந்தன்னி லுதகாதமதத்தில்வந்த
கௌரிநீசொல்லக்கேளாய் கலியாணஞ்செய்வதற்கு
துவரில்லாதூரப்போரோம் தையலேவீடுதிதன்னில்
எவரிங்கேவரவேபோரார் இஷ்டம்போல்நடந்திடாயே.

வ-ம். ஆனால்கேளடி கௌரி நாங்களென்ன தூரதேசம் கலியாணத்திற்கு போகுவோம் நாங்கள்வர எட்டுநாள்செல்லும் எண்கால் இரண்டுபடிகேழ்வரகுபோட்டிருக்கின்றேன்இதைபெற்றுக்கொண்டு இவ்விடத்தில் பதனமாகஇரும் கௌரியே.

கௌரி தரு.

மங்கையரேஎன்னசெய்வோம் மனதுவாடுதே
மதுரைவிட்டுவந்தநாளாய் வாதையாகுதே
அங்கயற்கண்ணிப்பாகன் அவரருள்இதுதானோ
நங்கையருகில்வாடி நான்வந்தேன்விதிதேடி மங்

திருமகள்விலாசமில்லை வீதிகளெங்கும்
சிவநடியார் காணவில்லையே
பிறவித்தணியஅன்னை பெற்றமந்திரம்தன்னை
அரிவைத்தவரினேனோ அச்சுதாஇவ்விதிதானோ

பார்த்துபார்த்துமே விட்டுதே
பரன்டியையைபார்க்காமல் கண்கள்கெட்டுதே
வேற்றுமதத்தில் விதித்தாலிப்படிநொந்தேன்
பாத்திவைத்தருள்தர வாரும்பரமனுரே மங்

சிவன் கவி.

மாயவன்மதத்தில்வந்த மங்கையாள்கௌரிதானும்
தூயமாமனதுநொந்து தோத்தரித்தழுகும்போது
பாயுவெள்விடையானீசன் பாவையையமனஞ்சோதிக்க
மேயவன்கிழவனுகி மெல்லிமுன்வருகின்றுரே.

தரு.

அரகராஒம் ஜகநாதா
நான்ஆண்டியாகவந்தேன் வேண்டியதோதா
திருமறைகா டெந்தன்வீடு

என்னைதேடிபிச்சையிட்டால் செப்புவானுடு
உத்தரதேசம் என்வீடு
அஙகேஉத்ததிருசூலம் தலைமண்டையோடு
நித்திரை என்சுடுகாடு
என்னைநினைத்தவர்க்கெல்லாம் தருவன்வானுடு
கௌரித்திருமனே எங்கே
அதைகண்டால்வழி காட்டிவிடுவீரங்கே
மாதுமனேயைக் கண்ணால்கண்டேன்
வயர்பசியெனதுன்பம் யானுமேவிண்டேன் அர

கௌரி தரு.

கண்டேனுன்சிவனே கண்டேனுன்
கண்டேனுன்சிவனேஇப்போ வண்டணியாள்தோத்தரித்தேன்
பெண்டுயென்குரையகல பெருமானருள்சுரந்து

சிவன் தரு.

வாழ்குவாயம்மா வாழ்குவாய்
வாழ்குவாயுனக்குவந்த தாழ்வுஎன்னசொல்லுமம்மா
ஏழைமதியன்னமே எனக்குயளிப்பாயம்மா

கௌரி தரு.

தலைவிதி ஐயாதலைவிதி
தலைவிதியால்வைஷ்ணவர்கள் வலையிலகப்பட்டேன்பாவி
உலைவாய்மெழுகைப்போல் உரிகியேமனம்வாடி

சிவன் தரு.

வாடியே யுள்ளம்வாடியே
வாடியேபசியினுலே ஓடியிங்கேவந்தேனம்மா
தேடியமுதளித்தால் கோடிப்புண்ணியமுண்டு வா

கௌரி கவி.

நான்படும்பாடுசிவனே யுலகர்நவிலும்பஞ்சு
தான்படுமோசொல்லத்தான்படுமோ வெண்ணத்தான்படுமோ
கான்படுகன்னியின்மான்படுமாறுபோல் கலங்கிநின்றேன்
ளேன்படுகின்றனேயென்றிரங்கா யென்னிலென்செய்வனே.

வ-ம். ஆனால் கேளுமையா சுவாமி நான்இந்த வைஷ்ணவபிராமணனிடம் வந்து பட்டபாடு சொல்லிமுடியாது என்மாமி மாமனுர் தூரதேசம் கலியாணத்திற்குபோயிருக்கிறுர் எனக்குபோட்டகேவர்படி இன்றேடேசரியாய்போய்விட்டதுஇன்றைக்குபோசனத்திற்கு வழியில்லை வீட்டில் அனேகசம்பத்திருக்கிறது நான் இதுநாள்பரியந்தம் இந்தவாசல்படிதாண்டி உள்ளேசென்றதில்லை உள்ளே செல்வோமென்றால் கதவுபூட்டிஇருக்கு நான்என்னசெய்வேன்ஜெகதீசா.

சிவன்-கவி.

அன்னமேநீயும்அமுதளிக்கமனமுண்டானல்
சொர்னமேகதவைநீ தொட்டாலேதிரக்கும்.

வ-ம். ஆனல் கேளும்கௌரியே நீஎனக்கு சாதம் அளிக்கவேணுமென்று உன்மனதில் சித்தமிருந்தால் நீபோய் வாசல்படிகதவில் உன்கையால் தொட்டால் திரவுகோலில்லாமல் கதவுதிரக்கும் அப்பவாவது எனக்குசாதம் போடலாமா சொல்லும் கௌரியே.

கௌரி-தரு.

சிவனேசிவனேஎன்றுஅம்மன் திருநீருமெய்தனில்தானணிந்தாள்
பாவவினைபோக்கும் பரமனைஎண்ணியேதானடந்தாள்
வாசப்படிகதவில்கையை மங்கையாள்வைத்தவுடன்கதவு
பாசமுடன்திரக்கஅந்தபாவையரும் உள்ளதானடந்தாள்
மாமிமாமனரிட்டசொல் மங்கையாள்தட்டினேமென்றுஎண்ணி
காமன்தனைஎரித்தயீசன் கட்டளைஎன்றுசமையல்செய்தாள்
வாரும்சுவாமிஎழுந்து மாதவரேசாதம்வடித்துவிட்டேன்
சீருடன்நீரும்உண்டுஎந்தன் சென்மமீடேரவேசெய்யும்நாதா சிவ

பொதுவசனம்.

அகோதெப்படியென்றல் இவ்விதமாகத்தானே கௌரியானவள் சாதம் சமைத்து கிழவராகவந்த சிவபெருமானுச்கு தன்கரத்தினல் சாதமளிக்க அப்போது பகவான் கிழவராக இருந்தவர் எவ்வர்னவடிவாக அவரைப்பார்த்து கௌரியானவள் பயந்து நமது நாயகருக்கு என்ன சொல்வதென்று தியங்கிஇருக்க அந்த சமையத்தில் கலியாணத்திற்குபோன மாமனர் மாமி கணவன் இவர்கள் தங்கள் மனையைநாடி வருகிறவிதங்காண்க.

சிவன்-தரு.

அம்மாகிழவனுச்சே நானென்னசெய்வேன்
அம்மா கிழவனுச்சே
செம்மையாகவேகானும் தெரிவையேநடுக்குது
கொம்மைசேர்ஸ்தனத்தாளே கோதையேஊட்டுவாய்

கௌரி-தரு.

ஐயாமனமகிழ்ந்தேனே அமுதளிக்க
ஐயாமன மகிழ்ந்தேனே
வையம்புகழுகின்ற துய்யாஉண்ணுவீர்நீரே
தையற்குரையகல தற்பராஉண்ணுவீர் ஐ

சிவன்-தரு.

பரமன்மனமகிழ்ந்து பாலமதானகி
திரம்பெரும்கன்னிசெய்ய வடிவழகன்
பரம்பொருளாகவே யாலவயதாகினர்

கௌரி-தரு.

எதிதுமோசமென் றேங்கினேன்
யானும் ஏங்கினேன்
மாதுஎன்னை மணந்தவர் கண்டாலே
தீதுவருமென்று தெரியாமல்மறைந்தனே எதி

வாமனவின்பன்-தரு.

ஆச்சுதேகலியாணம்சொர்னமனைசெல்வோம் அன்னையாரே
அரிவையாள்என்தேவிதனியாயிருப்பாளே அன்னையாரே

மாதவசீலர்-வேறுதரு.

காதலுடையஎன்கண்ணே மனையைநாடிசெல்லுவோமே
வேதப்செழித்திடவிளங்க உலகத்தில்சொல்லுவோமே

மாதவவல்லி-தரு.

ஆசையுடையஎன்ஆளுமனே வந்தோம்பிராணநாதா
ஆரோஒருவன்அசையாமல் நிற்கிறான்பிராணநாதா

வாமனவின்பன்-வேறுதரு.

கதவைத்திறந்ததுஎன்னடி கன்னியரேயதைபன்னடி
மதனைப்போலஒரு வாலிபனிருக்கிறான்
பதமுடனேஇங்கு பாலனிருப்பதென்ன கத

மாதவசீலர்-தரு.

சண்டாளிவந்ததேமோசம் நம்மையலெசெய்தானேநாசம்
கொந்தார்க்குழலியே குழந்தைவந்ததுஏது
மண்டையுடையுமுன்னே மாதேஉரைத்திடு சண்

கௌரி-தரு

நானென்றுமரிகிலேன்பாவி நடுங்குதேதிரேகங்களாவி
தீனதயாபரசெகதீசன் அருள்தானு
வானவர்புகழ்கோமான் வைதானுதலெவிதி

மாதவவல்லி-தரு.

சதிகாரிஇங்கேகில்லாதே தைரியம்வேறென்றுசொல்லாதே
மதிமோசக்காரியே மனையைவிட்டேகிடு
விதிமோசமோஇங்கு மெல்லிசெய்தாள்பாவி

வாமனவின்பன்-தரு.

இனிஇருந்தால்வருங்கோபம் இப்போசெய்தாபெரும்பாவம்
பனிமொழியேஇந்த பாதகம்நேர்ந்தது
தனியாய்க்குழந்தையை தையலேதூக்கியே

கௌரி-தரு.

மதுரையில்வாழ்கின்றமாயவர் வந்தார்தீர்த்தமாடநேயவர்
பரிவானகுழந்தையை பாவைஎன்னிடம்வைத்து
அரியஎந்திசென்றூர் அவரின்னம்வரஇல்லெ மது

மாதவசீலர்-தரு.

ஐயையோஇனி இங்கேகில்லாதே
அவனியோர்பார்த்தாலே சொல்லாதே
வையகத்தோரெல்லாம் மாதைப்பழிப்பாரே
செய்யவடிவாளே செல்லுமனையைவிட்டு ஐ

மாதவவல்லி-தரு.

குழந்தையைதூக்கிநடவடி கோபத்தாலேதுன்பப்படுவடி
செழுமதிபோல்வந்த தேவடியாளேநீ
முழுகுஇன்னநின்றால் மோசம்வருமடி

கௌரி-தரு.

நான்பாவியாகினேனையா என்னை
பாதுகார்த்தருளுவீர் துய்யா
ஆவிதவிக்குதே அரும்பாவியாகினேன்
கூவிக்கூவிஇந்த கோதையழுகுரேன் நான்
எந்தன் தலெவிதியே எங்கேவிட்டாய்சதியோ
சங்கரதேவாஇங்கே சதிசெய்யாதேவாவா
இனிமேலுயிர்வைத்து இருப்பேனுபுவிமேலே
தனியாய்குழந்தை தூக்கியே
தையல்ஏகுரேன் யேந்தியே

இவ்வேணைவந்தாலாச்சு இல்லாவிட்டாலுயிர்போச்சு
செவ்விதழுமையாளோடு தேரிவிடைமேலேரி நான்

பொது வசனம்.

இவவிதமாகத்தானே கலியாணத்திற்குபோன பிராமணள் வந்து பார்க்க எவ்வர்ன மாப்பிள்ளை யிருப்பதுபோல் காட்டி மறுபடிபச்சைக்குழந்தை வடிவமாகினர்பரமசிவன்இந்தக்குழந்தைவந்தகாரணமென்னவென்று கௌரியை அடித்துகுழந்தையைகௌரியிடம்கொடுத்துதங்கள் கிராமம்தாண்டி துரத்திவிட் அப்போது கௌரியானவள் சிவனைநோக்கி புலம்ப அந்தசமையத்தில் பச்சைக் குழந்தையாகிய பரமசிவம் விடைமேலழகராய் வந்து கௌரிக்கு தெரிசனம் கொடுப்பது.

சிவன் அகவல்.

அஞ்சாதேகௌரி அரைகுவேன்கேளும்
சஞ்சலமாகி தள்ரவும்வேண்டாம்
வஞ்சியேவேண வரமதுகேட்டால்
அஞ்சலித்துனக்கு அளிப்பேனுன்மாதே.

வ-ம். ஆனல் கௌரி நீமனவியாகூலப் படவேண்டாம் உன்னைப்போன்ற பதிவிரதா சிரோன்மணி இந்த உலகத்தில் கிடையாது உன்மனதில் கோரியவரத்தைக் கேட்டால் தருகிறேனம்மா கௌரி.

கௌரி-கவி.

எழுவகைபிரவிதோத்தம் எந்தனை அணுகாவண் ணம்
மழுவேந்தும்பரமனரே மகிக்ஷியாய்தந்திடாயே..

வ-ம. ஆனல் கேளுமையா சுவாமி பரமசிவமே எழுவகைபாகிய பிரவிதோற்றம்வேண்டாம் தங்கள் திருவடியைவிட்டு நீங்காமல் இருக்க வரம்பாலிக்கவேணுமையா சுவாமி பரமசிவமே.

பொதுவசனம்.

கௌரியானவள் தந்தையுரைத்த மந்திரத்தை இடைவிடாமல் துதித்தபடியால் பரமசிவனனவர் தேவவடிவாகச்செய்து விடைமேலேற்றி கௌரியை உமாதேவியோடு கைலைக்குசென்று சுகபோகமாக வாழ்ந்தார்.

வாழி வெண்பா.

வாழ்கவேதங்கள் வருணாச்சிரமங்கள்
வாழ்மதுரையீசனடி மாண்பாக-வாழ்கநற்
கௌரியுமைமோட்சமதை காசினியிற்கற்றுணர்ந்தோர்
தவரின்றிவாழ்வர் தழைத்து.

கௌரிமோட்ச நாடகம்.

முற்றிற்று.